Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 27 வெள்ளிக்கிழமை (09-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:136

## வைகோ உட்பட ஒன்பது பேர் மீதான 'பொடா' வழக்குகள் செல்லுபடியற்றவை!

### பொடா மறு ஆய்வுக்குழு பரபரப்புத் தீர்ப்பு

சென்னை,ஏப்.9

இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியதற்காக தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உட்பட ஒன்பது பேர் மீது 'பொடா' எனப்படும் பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்த வழக்குகள் செல்லுபடியற்றவை.

- இப்படி இந்திய மத்திய அரசின 'பொடா' மறு ஆய்வுக்குழு நேற்று வியாழக்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

நீதிபதி அருண் டி.சகாரியா தலைமையிலான ஆய்வுக்குழுவே இந்தப் பரபரப்பான தீர்ப்பை வழங்கியுள்ளது.

"ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. உட்பட ஒன்பது பேர் மீதான 'பொடா' வழக்கை தொடர்ந்து நீதிமன்றில் நடத்துவதற்கு காரணம் எதுவும் இல்லை. எனவே இவர்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சங்கரிக்கு எம்.பி. பதவி வழங்க நேசக்கரம் நீட்டுகிறது ஹெல உறுமய

கொழும்பு,ஏப்.9

யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு ஜாதிக ஹெல உறுமய கட்சி தேசியப்பட்டியல் எம்பி பதவி வழங்கி உதவ முன்வந்திருக்கிறது.

எனினும், ஆனந்தசங்கரி ஹெல உறுமய நேசக்கரம் நீட்டியதற்கு நன்றி தெரிவித்து பதவியை ஏற்க மறுத்து விட்டார் என்று அறிய வருகிறது.

இப்போது இல்லாவிட்டாலும் எந்த நேரத்திலாவது ஆனந்தசங்கரி விரும்பினால் அவரைத் தனது கட்சியின் தேசியப்பட்டியல் எம்பியாக்குவதற்கு ஹெல உறுமய தயாராக இருக்கிறது என்று அக்கட்சியின் செயலாளர் வண. தம்மலோக தேரர் தெரிவித்துள்ளார்.

இம்முறை தேர்தலில் வடக்கில் ஆனந்த சங்கரி ஜனநாயகரீதியாகத் தோற்கடிக்கப்படவில்லை. இதனால் தமிழ்ச் சமூகத்தின் உண்மையான மக்களின் குரல் ஒலிக்கவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் மட்டும் பேசக் கூடாது; அரசுக்கு ஹெல உறுமய தெரிவிப்பு!

## தெற்கு அரசியல் நிலைமையை உன்னிப்பாக அவதானிக்கிறோம்

### தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஏப்.9

தெற்கின் அரசியல் நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். புதிதாக ஆட்சிப்பீடம் ஏறியுள்ள கூட்டமைப்பில் இடம்பெறும் கட்சிகளின் கடந்தகாலச் செயற்பாடுகள் தொடர்பாக எமக்கு ஐயுறவு உள்ளது.

- இவ்வாறு கூறியிருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

கிளிநொச்சியில் வைத்து சர்வதேச

(12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்களின் சந்திப்பு ஒத்திவைப்பு

கிளிநொச்சி,ஏப்.9

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினருக்கும் இடையில் இன்று கிளிநொச்சியில் இடம்பெறவிருந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிய 20 உறுப்பினர்களும் கிளிநொச்சிக்கு வருகை தந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சில் தாமும் பங்குபற்றுவது அவசியம் என உரிமை கோருகிறார் கருணா

கொழும்பு,ஏப்ரல்9

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் த்மிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்கப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் உறுதி அளித்தார். புலிகளுடன் மட்டும் அரசு பேசக் கூடாது என்று நாடாளுமன்றத்தில் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட பௌத்த பிக்குகளின் கட்சியான ஜாதிக ஹெல உறுமய உரத்த குரலில் தெரிவித்திருக்கிறது.**

**அதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட கேணல் கருணா, கிழக்குத் தமிழ் மக்களும் பிரச்சினையில் சம்பந்தப்பட்டிருப்பதால் அவர்களின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதற்குச் சமாதானப் பேச்சுக்களில் அவர்களின் பிரதிநிதியாகத் தாமும் பங்குகொள்ளவேண்டியது அவசியம் என்று உரிமை கோரியிருக்கின்றார்.**

"ஐலண்ட்" ஆங்கிலப் பத்திரிகைக்கு கருணா வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு உரிமை கோரியிருக்கிறார்.

"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனோ, புலிகளின் வன்னி நிர்வாகமோ கிழக்குத் தமிழ் மக்கள் மீது தீர்ப்பு எதையும் திணிக்க முடியாது. அவர்கள் சார்பில் பேசும் பொறுப்பு எங்களுக்கு உண்டு. எனவே, நாங்களும் எதிர்காலத்தில் நடக்கும் சமாதானப் பேச்சுக்களில் கிழக்குத் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டு அவர்களின் அபி

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் வாஜ்பாய் வாழ்த்து

பொதுத் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தேசிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றதற்கும், மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவி ஏற்றிருப்பதற்கும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதிக்கு வாஜ்பாய் தாம் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் தேர்தலில் தங்கள் கூட்டமைப்பு வெற்றி பெற்றதற்காக வாழ்த்துகிறேன். (12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் நாளை பதவிப் பிரமாணம்

கொழும்பு,ஏப்.9

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய அமைச்சரவை உறுப்பினர்களின் பதவியேற்பு முன்னர் அறிவிக்கப்பட்டபடி இன்று நடைபெறமாட்டாது.

ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் இதைத் தெரிவித்தன.

இன்று, கிறிஸ்தவர்களின் விசேட தினமான பெரிய வெள்ளிக்கிழமை . அதனால் நாளை சனிக்கிழமையே அமைச்சர்களின் பதவியேற்பு வைபவ ரீதியாக ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும். (ஐ-7-9)

## துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கறுவாக்கேணியில் இளைஞரின் சடலம்

ஏறாவூர்.ஏப்9

வாழைச்சேனைப் பொலீஸ் பிரிவுக்குட்பட்ட கறுவாக்கேணி பாடசாலை மைதானத்துக்கு அருகில் துப்பாக்கிச சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க குறித்த இளைஞரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சிறைச்சாலைக்கு பலத்த பாதுகாப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ். சிறைச்சாலைக் கட்டடத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறையில் உள்ள சிறைக்கூண்டுகள் சிலவற்றின் கம்பிகள் அறுக்கப்பட்டிருந்ததை சிறைச்சாலைப் பணியாளர்கள் நேற்று அவதானித்தனர் என்றும் -

சிறையில் இருந்து தப்புவதற்கு கைதிகள் முயற்சிப்பது தெரியவந்திருப்பதாகவும் -

அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். சிறைச்சாலையிலிருந்து நேற்றுமுன்தினம் கைதி ஒருவர் தப்பி ஓடியது தெரிந்ததே.

இந்தச் சம்பவங்களை அடுத்து யாழ். சிறைச்சாலையைச் சுற்றிவர நேற்றிரவு இராணுவக்காவல் போடப்பட்டது. (ஐ)

## பிரதமரின் செயலாளராக லலித் வீரதுங்க

கொழும்பு,ஏப்.9

புதிய பிரதமரின் செயலாளராக லலித் வீரதுங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

லலித் வீரதுங்கா அரச நிர்வாக சேவையில் 25 வருட கால அனுபவத்தைக் கொண்டவர் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.(ஐ-7)

## சுதந்திரக் கூட்டமைப்பு தேசியப் பட்டியல் எம்.பிக்கள்

கொழும்பு,ஏப்.9

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் எம்.பிக்கள் 13 பேரின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

லக்ஷ்மன் கதிர்காமர், பேராசிரியர் விஷ்வா வர்ணபால, டியூ குணசேகர, பேராசியர் திஸ்ஸ விதாரண, மொஹமட் ஹுஸன் சேகு இஸதீன், கீதாஞ்சன குணவர்த்தன, அன்வர் இஸ்மாயில், ராமலிங்கம் சந்திரசேகரன், ஜனதாஸ பீரிஸ், ஈ.ஏ.டி.பி. வீரசேகர ,பீலிக்ஸ் குமார சிங்க ஸ்ரீ லியனகே ,வசந்த சமரசிங்க (12ஆம் பக்கம் பார்க்க)



நான் உங்கள் புத்தாண்டு. உங்களுக்கொரு அன்பளிப்பு வைத்திருக்கின்றேன்.

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

உங்களுக்கு வெற்றிகரமான ஆரம்பம். ரூ.50,000 அல்லது அதற்கு மேலதிகமான தொகையை கால வைப்புச் செய்பவர்களுக்கு, தேசிய சேமிப்பு வங்கி விசேட அன்பளிப்பை வழங்குகிறது. 2004 ஏப்பிரல் 14 - 21 வரை மட்டுமே இச்சலுகை. ஏப்பிரல் 14ம் திகதியன்று வங்கியில் கொடுக்கல் வாங்கல் செய்பவர்களுக்கு இலவசமாக உண்டியலும் கைவிசேஷமும் வழங்கப்படும். உங்கள் குடும்பங்களும் அழைக்கப்படுகிறார்கள்.

NSB தேசிய சேமிப்பு வங்கி

# பேரியல், அதாவுல்லா, அன்வர் இஸ்மாயில் மூன்று முஸ்லிம்களும் அமைச்சர்கள் ஆகின்றனர்

கொழும்பு,ஏப்.9

மக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் மூன்று முஸ்லிம்களுக்கு அமைச்சர் பதவிகள் கிடைக்கின்றன. ஒருவர் அமைச்சராகவும், இருவர் பிரதியமைச்சர்களாகவும் நியமிக்கப்படுகின்றனர்.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் கிழக்கு பிராந்திய அமைச்சர் ஆகின்றார். முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா மற்றும் சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில் ஆகிய இருவரும் பிரதியமைச்சர்கள் ஆகின்றனர்.

துறைமுக அபிவிருத்தி பிரதியமைச்சராக அன்வர் இஸ்மாயிலும் நெடுஞ்சாலை போக்குவரத்து பிரதியமைச்சராக ஏ.எல்.எம். அதாவுல்லாவும நியமிக்கப்படுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த கல்வி அமைச்சராகவும் -

அநுரா பண்டாரநாயக்க உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சராகவும -

லஷ்மன் கதிர்காமர் வெளிநாட்டு அமைச்சராகவும் -

மங்கள சமரவீர நகர அபிவிருத்தி அமைச்சராகவும் நியமிக்கப்படவுள்ளனர். பிரதிநிதியமைச்சு பதவியை தனக்குத் தருமாறு மங்கள சமரவீர வற்புறுத்தி வருகிறார் என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நிமால் சிறிபால டி சில்வா கப்பல் போக்குவரத்து அமைச்சராகவும் ஜோன் செனவிரத்ன சுகாதார அமைச்சராகவும் நியமனம் பெறுகின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடக பேச்சாளராக இருந்த சரத் அமுனுகம தகவல்துறை அமைச்சராக நியமிக்கப்படுவார்.

ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்படுவார் என்று நம்பப்படுகிறது.

பாதுகாப்பு மற்றும் நிதியமைச்சுக்களை ஜனாதிபதி தன்வசம் வைத்துக்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்து விவகார அமைச்சு நீக்கப்படும் என்று தெரிகிறது. இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களுக்கு திணைக்களங்கள் மட்டுமே இயங்கும்.

(ஐ-க)

## எதிரணியினர் தாக்கப்படுவதை தடுக்க பொலீஸாருக்குப் பணிப்பு

கொழும்பு,ஏப்.9

தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகளைத் தடுத்து நிறுத்துமாறு பொலீஸ்மா அதிபரை ஜனாதிபதி பணித்துள்ளார்.

எதிரணியினர் மீது மேற்கொள்ளும் இத்தகைய வன்முறைகள் அனைத்தையும் முற்றுமுழுதாக தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலீஸாரால் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்துக்குள் மட்டும் பல்வேறு முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாக பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய வன்முறைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் நாடு முழுவதும் பொலீஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-9-ரி)

## புதிய எம்.பிக்கள் தகவல் பெற நாடாளுமன்றத்தில் நிலையம்

கொழும்பு,ஏப்.9

இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் வசதி கருதி, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் தகவல் சேவை நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு நாடாளுமன்றச் செயலாளர் பிரியாணி விஜேசேகர தீர்மானித்துள்ளார்.

இத்தகவல் சேவைப் பிரிவு எதிர்வரும் 15, 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 3.30 வரை திறந்திருக்கும். இங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் தகவல்கள் மற்றும் ஆவணங்கள் வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால், அந்நிலையத்தின் மூலம் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிககப்பட்டுள்ளதாகவும் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சிரமமின்றி நாடாளுமன்றத் தொகுதிக்குள் பிரவேசிப்பதற்குத் தமது [illegible] அடையாள அட்டைகள் சகிதம் [illegible]க்குமாறும், தமது நாடாளுமன்ற [illegible]பினர் தொடர்பான அனுமதிப் [illegible]ரங்களைப் பயன்படுத்தி நா[illegible]மன்றத்திற்குள் பிரவேசிக்கு[illegible]மாறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வரலாறு காணாத வெற்றியா?

# நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபியுங்கள் பார்க்கலாம் - ராஜித சவால்

கொழும்பு,ஏப்.9

ஆக 28 லட்சம் வாக்குகளை மட்டுமே பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெருமை மிக்க வெற்றி கிட்டியுள்ளதாகக் கூறுகின்றார். அவர் தன்னுடைய அரசின் பெரும்பான்மையை 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிருபிக்கட்டும் பார்க்கலாம் என்று சவால் விடுகின்றார் முன்னாள் அமைச்சரும், களுத்துறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ராஜித சேனரத்தின.

ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பியினர் 14 லட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளனர். ஸ்ரீல.சு.கட்சியினர் 28 லட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளனர். ஆனால், ஐக்கிய தேசியக கட்சி தனித்துநின்று 35 லட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளது

இவற்றை ஒப்பிடும்போது நாட்டு மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே கூடுதலாக வாக்களித்துள்ளனர் என்பது தெரிகிறது. ஜனாதிபதி இதனை அறியவில்லை.

உண்மையை மூடிமறைத்துத் தாம வரலாறு காணாத வெற்றி பெற்றுவிட்டார் என்று அவர் பீற்றுகிறார்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை இவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்போது ஸ்ரீல.சு.கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பன கூட்டாக அமைந்திருந்த ஐக்கிய முன்னணி அரசை ஐக்கிய தேசிய கட்சி தனியாக நின்று 13 லட்சம் மேலதிக வாக்குகளால் தோற்கடித்தது. அதுதான் வரலாற்றுப் பெருமை.

இவற்றை எல்லாம் தெரிந்தும் தெரியாதவர் போல் பேசும் ஜனாதிபதி 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும போது தமது பெரும்பான்மையை நிருபிக்கட்டும் பார்க்கலாம் என்று ராஜித சேனரத்ன ஊடக அறிக்கை ஒன்றில் சவால் விடுத்துள்ளார். (க)

## சா... கச்சேரியில் ...ஷெல்கள் வெடிக்கவைப்பு

தென்மராட்சி,ஏப்.9

சாவகச்சேரி விறுமர் கோவில் பகுதியில் வெடிக்காத நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு ஷெல்கள் நேற்று 'ஹலோ டிரஸ்ற்' கண்ணி அகற்றும் நிறுவனத்தினரால் செயலிழக்கச் செய்யப்பட்டன. அவ்வேளையில் அருகில் உள்ள வீடுகளிலிருந்த பொதுமக்களும் வீதியில் காணப்பட்டோரும் வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

முற்பகல் 11.00 மணிக்கு குண்டு செயலிழக்கச் செய்யப்பட்ட போது சுமார் 100 யார் தூரத்தில் உள்ள சாவகச்சேரி நகரசபை அலுவலக உத்தியோகத்தர்களும், பொதுநூலக உத்தியோகத்தர்களும் வாசகர்களும் பாதுகாப்பான இடத்துக்குச் செல்லுமாறுபணிக்கப்பட்டனர்.

இதனால் சுமார் ஒரு மணி நேரம் நகரசபை அலுவலகப் பணிகள் தாமதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117-31)

## மோ.சைக்கிள் ஓட்டி காயம்

தென்மராட்சி,ஏப்.9

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியில் காணப்பட்ட இரும்புக் கம்பத்துடன் (கேடர்) மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கொடிகாமம் பகுதியில் இடம் பெற்றது.

வரணி குடமியனைச் சேர்ந்த கதிரவேலு இராசையா (வயது 57) என்பவரே காயமடைந்தார். இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

# இந்தியாவில் ஆட்சிமாறினாலும் இலங்கைபற்றிய கொள்கை மாறாது

## தூதர் நிருபன் சென் கூறுகின்றார்

கொழும்பு,எப்.9

இந்தியாவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலின் முடிவுகள் எதுவாக இருப்பினும் இலங்கை தொடர்பான இந்தியாவின் இப்போதைய கொள்கை எதுவித மாற்றமும் இன்றி தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்று இலங்கையில் உள்ள இந்தியத்தூதர் நிருபன் சென் கூறியிருக்கிறார்.

'இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கை இருநாடுகளுக்கிடையிலான ஒன்று. அது கட்சிக் கொள்கைகளின் அடிப்படையிலானது அன்று. அது இந்திய நாட்டின் கொள்கையின்பாற்பட்டது'. என்று நிருபன் சென் கூறினார்.

இந்தியக் காங்கிரஸ் கட்சி தமிழ்நாடு தி.மு.கழகத்துடன் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி தேர்தலில் வெற்றி பெற்றால் இந்திய அரசின் கொள்கை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக அமைந்துவிடுமா என்று கேட்கப்பட்ட போது "இந்தியாவின் கொள்கை தமிழ்நாட்டின் கொள்கை அல்ல, இந்தியாவின் கொள்கை இந்திய மக்களின் கொள்கையாகவே இருக்கும்" என்றார் சென்.

இந்தியாவின் இலங்கை தொடர்பான கொள்கை பற்றி அவர் மேலும குறிப்பிடும் போது, இலங்கையின் இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றை இந்தியா மதிக்கிறது என்றும் இலங்கை இனப்பிரச்சனை அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்று விரும்புகிறது என்றும் கூறினார். இலங்கையில் உள்ள சகல தரப்பு மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் பன்மைத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் அது அமைய வேண்டும் என்றும் நிருபன் சென் கூறினார். (ஐ-ப)

## பரிபாலனசபை நூற்றாண்டு விழா

பருத்தித்துறை,ஏப்.9

புலோலி மேற்கு, ஆத்தியடி பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் நூற்றாண்டு விழா, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆலய முன்றிலில் இடம் பெறவுள்ளது.

விநாயகப் பெருமானுக்கு விஷேட அபிஷேகத்துடன் பூசை இடம்பெறும். இந்த விழாவில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நதிவான் க.அரியநாயகம் கலந்துகொள்கிறார். நிகழ்வில் மலர் வெளியீடு மற்றும் பரிசளிப்பு வைபவமும் இடம் பெறும். (ஐ-9-118)

## வானில் கடத்தப்பட்டார் மகன்: தாயார் பொலீஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.9

வான் ஒன்றில் வந்தவர்களால் ஏற்றிச்செல்லப்பட்டார் என்று கூறப்படும் இளைஞர் ஒருவர் காணாமல் போயிருக்கிறார். இது குறித்து அந்த இளைஞனின் தாயார் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறையிட்டிருக்கிறார்.

இச்சம்பவம் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்றுள்ளது என்றும், திருமறைக்கலாமன்றத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்குகொண்டிருந்த தேவசகாயம் மில்ரன் சசிக்குமார் வயது 27 என்ற தனது மகன் வானில் வந்தவர்களினால் ஏற்றிச்செல்லப்பட்டுள்ளதாகவும் இன்னும் தனது மகன் வீடு திரும்பவில்லை என்றும் இலக்கம் 14/4, பிளச்சர்ஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி என்னும் முகவரியைச் சேர்ந்த தாயாரான தே.மேரிநவநேசம் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ-ரி)

## பெரிய வெள்ளி வழிபாடு

சாவகச்சேரி,ஏப்.9

கிறிஸ்தவர்கள் இன்று பெரிய வெள்ளியை புனிதமாக அனுஷ்டிக்கவுள்ளனர். இப் புனித நாளிலை ஒட்டி தேவாலயங்களில், பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

மட்டுவில் வடக்கு லூர்த்து மாதா ஆலயம், சாவகச்சேரி விகோரியார் தேவாலயம் என்பனவற்றிலும் விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.(ஐ-31)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.9

தமிழீழ விளையாட்டுத்துறை மற்றும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின விவரம் வருமாறு -

★ பிற்பகல் 3.30 மணி - வல்வை கழுகுகள் வி.க. அணி எதிர் வதிரி டயமன்ஸ் வி.க. 'பி' அணி.

★ மாலை 4.30 மணி -பொலிகை விநாயகர் வி.க. அணி எதிர் நவிண்டில் கலைமதி வி.க. 'பி' அணி.(எ-5)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.9

தம்பசிட்டி உதய தாரகை விளையாட்டுக் கழகம் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் சதுரங்க சுற்றுப் போட்டி எதிர்வரும் 12ஆம் ,13ஆம் திகதிகளில் தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளன.

ஆண்,பெண் இருபாலாருக்கும் நடத்தப்படவுள்ள இச் சுற்றுப் போட்டி மாணவர்களுக்கும் மாணவர் அல்லாதவர்களுக்கும் என வெவ்வேறாக நடத்தப்படவுள்ளன.

பங்குபற்ற விரும்புவோர் போட்டிகள் நடைபெறும் தினங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என உதய தாரகை விளையாட்டுக் கழக செயலாளர் க.உதய சூரியன் கேட்டுள்ளார். (எ-5)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.9

தமிழ் ,சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு வடமராட்சி இராணுவத்தினர் நடத்தும் பாரம்பரிய விளையாட்டுக்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு புலோலி பல்லப்பை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், கிறிஸ் மரம் ஏறுதல் மற்றும் இசை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இந்த விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளுமாறு படையினர் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கிகள் மூலமும் பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். (எ-5-70)

## தென்மராட்சியில் கலந்துரையாடல்

தென்மராட்சி,ஏப்.9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 வகுப்புகளுக்கான பல் பாடநூல் தேர்வு தொடர்பாக நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்ட அதிபர்கள், கணிதம், தமிழ் ஆகிய பாடங்களின் ஆசிரியர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் எதிர்ரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.ச...நாதன் அறிவித்துள்ளார். (ஐ-117)

# யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாக மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியொன்று இந்த ஆண்டிலிருந்து நடத்தப்படவுள்ளதாக அதன் இயக்குநர் பேராசிரியர் கே.சித்திரவடிவேலு தெரிவித்துள்ளார்.

கடந்த சில வருடங்களாகக் கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற ஒருவருட கால மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்தவர்களுள் தேர்ந்தெடுக்கப் படவுள்ள குறிப்பிட்ட ஒரு தொகையினரே மேற்படி கற்கைநெறியில் சேர்த்துகொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கு மேலும் ஒரு வருடம் பயிற்சியளிப்பதன் மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறிலை பட்டபில்வதற்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது. இந்த வாய்ப்பானது இந்த வருடம் மட்டுமே வழங்கப்படும். அடுத்த மாதம் 10 ஆம் திகதி கற்கை நெறி ஆரம்பமாகவுள்ளது.

எனவே, மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியில் சித்தியடைந்தவர்கள் எவரும் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் என்று அவர் அறிவித்தார்.

(எ-10)

## அதிபர்களின் கூட்டம் ரத்து

யாழ்ப்பாணம்.ஏப்.9

நாளை சனிக்கிழமை, யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவிருந்த அதிபர்களுக்கான கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்தள்ளார். (ஐ.9)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# அமெரிக்க இராணுவத்துக்கு ஈராக் மற்றொரு வியட்நாமாக மாறுமா?

## ஆய்வாளர்களும், அமெ. மக்களும் எழுப்பும் சந்தேகம் இது!

பக்தாத்,ஏப்.9

அமெரிக்கப் படையினருக்கு ஈராக் இன்னொரு வியட்நாமாக மாறிவிடக் கூடும் என்று இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி



தாக்குதலுக்கு இலக்கான அமெரிக்கப் படைவீரர் ஒருவருக்கு முதலுதவி வழங்கப்படுகிறது.

அகற்றப்பட்ட பின்னர் தற்போது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் அங்கு பெரும் உயிரிழப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் சதாம் ஆதரவுப் படையினர் மட்டுமே அமெரிக்க இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தி வந்தனர். பின்னர் சுனி பிரிவு இஸ்லாமியர்கள் அமெரிக்கப் படையினரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். சதாமும் இதே மதப்பிரிவைச் சேர்ந்தவர் என்பதாலேயே இவர்கள் கிளர்ச்சி செய்கின்றனர் என்று அமெரிக்கா அப்போது கூறியது.

ஆனால், சதாமின் ஆட்சிக்காலத்தில் அவரால் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களும், கூட்டுப்படையினர் ஈராக்குக்குள் புகுந்து சதாமை ஆட்சியிலிருந்து அகற்றியபோது அவர்களை வரவேற்றவர்களுமான 'ஷியா' பிரிவு முஸ்லிம்கள் தற்போது பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டுவருகின்றனர். இதேவேளை, சுனி பிரிவு முஸ்லிம்களும் மறுபுறம் கிளர்ச்சியில் ஈடுபடுகின்றனர்.

அமெரிக்கா தலைமையிலான ஆக கிரமிப்புப் படைகளுக்கு எதிராக ஈராக்கின் பல்வேறு நகரங்களிலும் ஒரே சமயத்தில் எழுந்துள்ள கிளர்சசி மிக மோசமான நிலைமையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கின் ஷியா, சுனி ஆகிய இரு பெரும் முஸ்லிம் பிரிவுகளைச் சேர்நத மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கின்றனர்.

இந்தக் கிளர்ச்சியால் கடந்த 15 நாள்களில் 100 ஈராக்கியரும் கூட்டுப் படையினர் 30 பேரும் பலியாகியுள்ளனர்.

ஈராக்கிய சுதேசி மக்களின் கிளர்ச்சி பல நகரங்களிலும் ஒரே சமயத்தில் வெடித்திருப்பதால் ஈராக் மீதான அமெரிக்காவின் பிடி தளர்ந்து வருவதாக சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஈராக், அமெரிக்காவின் மற்றொரு வியட்நாமாக மாறுமா? என்ற சந்தேகம் அமெரிக்க மக்கள் மத்தியிலும் எழத் தொடங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஈராக்கில் தற்போது வெடித்துள்ள கிளர்ச்சி பெரும் உள்நாட்டுப் போராக உருவெடுக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

ஈஸ்டர் விடுமுறைக்காக டெக்ஸாஸில் கிராபோர்டு பகுதியில் ஓய்வெடுக்கும் அதிபர் புஷ்ஷிடம் ஈராக்கில் நடப்பது என்ன என்பது விளக்கப்பட்டிருக்கிறது.

வெள்ளை மாளிகைப் பிரதிநிதி ஸ்காட் மெக்ளின் இது குறித்துக் கூறும்போது -

"உலகம் முழுவதும் பாதுகாப்பாக இருக்கப் பாடுபடும் எங்கள் இராணுவத்தினர் ஒவ்வொருவரினதும் உயிரிழப்பும் கண்டு அதிபர் புஷ் அதிர்நது போயிருக்கிறார். - என்றார்.

இந்த நெருக்கடி குறித்து பிரிட்டன் பிரதமர் ரொனி பிளயருடனும் அதிபர் புஷ் ஆலோசனை நடத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்,

ஈராக்கின் பல்வேறு நகரங்களிலும் பெரும் குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்கின்றன என்றும் -

ஆங்காங்கே கூட்டுப்படையினருக்கும் ஈராக்கியர்களுக்கும் இடையில் துப்பாக்கிச் சமர்கள் இடம்பெற்றுவருகின்றன என்றும் -

வீதிகளில் சடலங்கள் கிடப்பதைப் பார்க்க முடிவதாகவும் -

சர்வதேசச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளர்ச்சியாளர்களை அடக்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக சுனி முஸ்லிம்கள் அதிகம் வாழும் பலூஜா நகரில் நேற்றுமுன்தினம் பள்ளிவாசல் ஒன்றின் மீது ஐநூறு இறாத்தல் எடையுள்ள வெடிகுண்டை விமானம் மூலம் வீசி அந்தப் பள்ளிவாசலைத் தகர்த்தது அமெரிக்கப்படை.

பள்ளிவாசலின் எல்லைச் சுவர்களை நோக்கி ரொக்கட் குண்டுகளும் வீசப்பட்டன. இந்த நடவடிக்கையில் நாற்பது ஈராக்கியர் பலியானார்கள் என்றும் இருநூறு பேர்வரை காயமடைந்தனர் என்றும் ஈராக், உள்ளூர் வாசிகள் தெரிவித்தனர். ஆனால், ஒரேயொரு கிளர்சியாளர் மட்டுமே இந்தப் பள்ளிவாசல் தகர்ப்பில் உயிரிழந்தார் என அமெரிக்க ஆக்கிரமிப்புப்படைகளின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அதிரடியாக ஈராக்கை வழிக்குக் கொண்டுவர மேலும் படைகளை அமெரிக்கா அனுப்புமா அல்லது வேறு நடவடிக்கை எடுக்குமா என்பது விரைவில் தெரியும்.



அமெரிக்கப் படையினரின் கவச வாகனத்துக்கு எரியூட்டிய மகிழ்ச்சியில் ஈராக்கியக் கிளர்ச்சியாளர்கள் இருவர்.

கடந்த வாரத்தில் பலூஜாவில் நான்கு அமெரிக்க வீரர்கள் கெரில்லாத்தாக்குதலில் கொல்லப்பட்டனர். அதனையடுத்து பலூஜா நகரை முற்றுகையிட்ட அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. கிளர்ச்சியாளர்களின் முதுகெலும்பை முறிக்கும் இந்த நடவடிக்கையில் 26 ஈராக்கிய மக்கள் உயிரிழந்தனர். காயப்பட்டவர்களின் எண்ணிக்கை 36. பலூஜா மருத்துவமனை டாக்டர் ரபீக் கூறும்போது "26 சடலங்கள் வந்திருக்கின்றன. காயங்களுடன் சிகிச்சைக்காக 30 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள்" என்று குறிப்பிட்டார். இந்த 26 பேர் தவிர தெருக்களில் நடக்கும் சண்டையில் எட்டுப் பேர் மடிந்தனர்.

இதுதவிர, ஈராக்கின் தெற்குப் பகுதியில் உள்ள நசரீயா, குட், கர்பலா ஆகிய இடங்களிலும் மோதல் நடக்கிறது. நசரீயா நகரில் அமெரிக்க கூட்டுப்படை நடத்திய தாக்குதலில் 15 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 35 பேர் காயமடைந்தனர். இதில் கூட்டுப்படை சார்பில் போரிட்ட இத்தாலிய வீரர்கள் சிலருக்கு காயமும் ஏற்பட்டது.

அதேபோல, அம்ரா என்ற இடத்தில் பிரிட்டிஷ் படையினர் நடத்திய தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் கடந்த சில நாள்களாக அமெரிக்காவுக்குச சவால் விட்டு புயல் எனக் கிளம்பியிருக்கும் ஷியா மதத் தலைவர் மொக்டடா அல்சடரின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுகின்றது. இவரின் 'கறுஞ்சட்டைப் படையினர்' என்று கூறப்படும் ஆதரவாளர்கள் பயங்கரமான கெரில்லாத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். ஈராக்கை விட்டு அமெரிக்கா வெளியேற வேண்டும் என்று கூறும் இந்த அல்-சடார், ஷியா முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர் இவர் இப்போது தலைமறைவாகியுள்ளார். இவர் எதிர்ப்பு ஆரம்பித்த சில நாள்களில் 130 உயிர்ப் பலிகள் இடம் பெற்றுள்ளன. இவரது எதிர்ப்பு மேலும் வலுப்படும் பட்சத்தில் ஈராக்கை நிர்வகித்து நடத்துவது என்பதே அமெரிக்காவுக்கு கேள்விக்குறியாகிவிடும் என்று கூறப்படுகிறது. (ஒ)

## இந்திய-பிரெஞ்சு கடற்படைகள் கூட்டுப் போர் பயிற்சி ஒத்திகை

இந்திய - பிரான்ஸ் கடற்படைகளின் கூட்டுப்பயிற்சி ஒத்திகை நேற்று முன்தினம் கோவாவை அண்டிய கடற்பகுதியில் பிரமாண்டமான அளவில் ஆரம்பமானது.

இப்பயிற்சி 15ஆம் திகதி வரை நடைபெறும். இந்தியாவுக்கும் பிரான்ஸுக்கும் இடையே கடற்படைக் கூட்டு ஒததிகைப் போர்ப்பயிற்சி தொடர்பாக 1998ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருநாடுகளின் கடற்படையினரும் அவ்வப்போது குறிப்பிட்ட காலத்தில் கடற்படை கூட்டு ஒத்திகைப் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆண்டின் போர்ப் பயிற்சி தற்போது ஆரம்பமாகியுள்ளது. இதற்காக அரபிக்கடலில் பாரசீக வளைகுடாப் பகுதியில் இருந்து பிரான்ஸ் நாட்டு கப்பல் படை கோவா கடல் பகுதிக்கு வந்து சேர்ந்தது.

இந்தியாவின் 'வருணா 2004' போர்க் கபபல் உட்பட விமானந்தாங்கிக் கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களுமாக மொத்தம் 6 போர்க் கப்பல்கள் இந்தப் போர்ப் பயிற்சியில் கலந்துகொள்கின்றன.

இதேபோல, பிரான்ஸ் நாட்டு கடற்படை சார்பில் 40 ஆயிரம் தொன் எடையுள்ள 40 விமானம் தாங்கிச் செல்லும் - மிகப் பெரிய அணுசக்தி கப்பலான 'சார்லஸ் - டி - கப்பலி' உட்பட போர்க் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் என மொத்தம் 8 போர்க் கப்பல்கள் இந்த போர்ப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

எதிரிகளின் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவது, எதிரிகளின் போர்க்கப்பல்களை அழித்து நாசமாக்குவது, எதிரிகளின் நீர்மூழ்கிக்கப்பல்களை தாக்குவது, ஏவுகணைமூலம் கப்பலில் இருந்து தாக்குதல் நடத்துவது போன்ற பயிற்சிகளும் இதர நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய போர்ப் பயிற்சிகளும் இந்த ஒத்திகை நிகழ்ச்சியில் இடம்பெற்றன. இதுவரை நடக்காத அளவுக்கு மிகப் பிரமாண்டமான இந்தப் போர்ப்பயிற்சி நடத்தப்படுகிறது.

இப்போர்ப்பயிற்சியில் இந்திய மற்றும் பிரெஞ்சு கடற்படை வீரர்கள் பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

## லாலுவிடம் சொந்தநிலம் கிடையாதாம்

பட்னா,ஏப்.9

இந்தியாவின் பீஹார் மாநில முன்னாள் முதல்வர் லாலுப்பிரசாத் யாதவ் தனக்குச் சொந்தமாக ஒரு துண்டு நிலம்கூடக் கிடையாது என்று சொத்து விவரப் பிரகடனத்தில் தெரிவித்துள்ளார்.

பல கோடி ரூபா மாட்டுத்தீவன ஊழல் வழக்கில் சிக்கியுள்ள லாலுப் பிரசாத்யாதவ் இந்திய நாடாளுமன்றத்தேர்தலில் பீஹார் மாநிலம், சாப்ரா தொகுதியில் போட்டியிடுகிறார்.

இதற்கான வேட்புமனுவுடன் சமர்ப்பித்த சொத்துவிவரத்தில் லாலு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும், மாருதி காரும், பழைய ஜீப் ஒன்றும் மட்டுமே தன்னிடம் உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

## கண்ணிவெடித் தாக்குதலில் 22 பொலீஸார் உயிரிழப்பு

### இந்தியாவில் சம்பவம்

இந்தியாவின் ஜார்க்கண்ட மாநிலத்தில் தீவிரவாதிகள் வைத்த கண்ணிவெடிக்கு 22 பொலீஸார் பலியாகினர். மேற்கு சிங்பும் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த இச்சம்பவத்தில் ஒரு தீவிரவாதியும் இறந்தார்.

துணைப் பிரதமர் எல்கே.அத்வானி மேற்கொண்டுள்ள பாரதீய உதய யாத்திரை ஜார்க்கண்ட மாநிலத்தை அடைவதற்கு முன்னதாக இத்தாக்குதல் நடந்திருக்கின்றது.

பலிபியா என்ற இடத்தில் பொலீஸ் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். இரு வாகனங்களில் அவர்கள் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது, வழியில் புதைத்து வைக்கப்பட்ட நிலக்கண்ணியைத் தீவிரவாதிகள் இயக்கினர். அதில் சிக்கிய பொலீஸார் 22 பேர் பலியாகினர். இரு வாகனங்களும் முற்றிலுமாகச் சேதமடைந்தன. இந்தச் சம்பவத்தில் ஒரு தீவிரவாதியும் உயிரிழந்தார் என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)

## ஹெய்ட்டியின் புதிய அரசால் முன்னாள் அமைச்சர் கைது!

ஹெய்ட்டியில் நாட்டை விட்டு வெளியேறிய முன்னாள் அதிபர் ஜேன் பேட்ரண்ட் அரிஸ்டிட்டின் அரசில் உள்

உலக அரங்கில்

துறை அமைச்சராக இருந்த ஜொய்லரம் பிரிவேட் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். அரிஸ்டிட்டின் ஆட்சிக் காலத்தில் அவரது ஆட்சிக்கு எதிரானோர் பலரைப் படுகொலை செய்யத்தூண்டிய குற்றத்துக்காகவே இவர் கைது செய்யப்பட்டார் என்று கூறப்பட்டது.

பெப்ரவரி 29ஆம் திகதி நாட்டை விட்டு அரிஸ்டிட் வெளியேறிய பிறகு, புதிய ஆட்சியினரால் முதன்முதலாகக் கைது செய்யப்பட்ட அரிஸ்டிட் அரசின் மூத்த உறுப்பினர் இவரே என்று கூறப்படுகிறது.

அரிஸ்டிட் ஆட்சியில் பிரதமராக இருந்த யுவோன் நெப்டியூன் உட்பட அந்த ஆட்சியின் முக்கிய உறுப்பினர்களான பல டசின் கணக்கானோரை நாட்டை விட்டு வெளியேற அனுமதிப்பதில்லை என்று ஹெய்ட்டியின் புதிய அரசு அறிவித்து ஓரிரு தினங்களிலேயே முன்னாள் உள்துறை அமைச்சர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

முன்னாள் அரச நிர்வாகத்தினால் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்காகவே இவர்கள் நாட்டை விட்டு வெளியேறாமல் தடுக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று புதிய அரசு அறிவித்துள்ளது. (க)

## 'லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்' பத்திரிகைக்கு புலிட்ஸர் விருது

நியூயோர்க்,ஏப்.9

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'லொஸ் ஏஞ்சல்ஸ்' டைம்ஸ் பத்திரிகைக்கு 'புலிட்ஸர்' விருது வழங்கியிருக்கிறது.

சிறப்பான செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளுக்கு ஆண்டுதோறும் அமெரிக்காவில் 'புலிட்ஸர்' விருது வழங்கப்பட்டு வருகிறது.

கலிபோர்னியா காட்டுத் தீ பற்றிய செய்தியை சிறப்பாக வெளியிட்டதற்காக 'லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்' பத்திரிகைக்கு இந்த ஆண்டுக்கான புலிட்ஸர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு தலைப்புக்களைத் தாங்கிய செய்திகளைச் சிறப்பாக வெளியிட்டதறகாக இந்தப் பத்திரிகைக்கு புலிட்ஸர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. 5 பிரிவுகளில் புலிட்ஸர் விருதுகள் இந்தப் பத்திரிகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு புலிட்ஸர் விருது பெற்ற 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகைக்கு இந்த ஆண்டு பொதுச் சேவை விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் பற்றிய செய்திகளை நல்ல முறையில் சேகரித்துத் தந்த 'வாஷிங்ரன் போஸ்ட்' செய்தியாளர் தோணி ஷாதித்துக்கு இந்த ஆண்டு புலிட்ஸர் விருது கிடைத்துள்ளது.

'டல்லாஸ்' காலைப் பத்திரிகைக்கு சிறந்த புகைப்படங்களுக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 24ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் வைத்து இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

(க)

## உளமார வாழ்த்திப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்

ஜப்பான் உள்ளக பல்கலைக்கழகம் - நுண்ணறிவு கலைப்பிரிவால் (Japan International University for Martial Arts) சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் (சமாதான நீதிவான், பிரதமகுரு, மருதடிப் பிள்ளையார் கோயில், விளைவேலி, சாவகச்சேரி) அவர்களுக்கு 26.03.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30மணிக்கு இலக்கம் 49, பிரட்ரிகா வீதி, கொழும்பு - 06 என்னுமிடத்தில் "கலாநிதி" பட்டம் வழங்கப்பட்டமையையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைவதுடன் உளமார வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ பா.பாலகுமாரக்குருக்கள்,
பிரதமகுரு வட்டு. சிவன் கோயில்.

(30552) (26-34-14-18)

## வேலை ஆள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு வேலைக்கு ஆள் தேவை.
உடன் நேரில் வரவும்.
அபிஸ் கோப்பி,
115, 114, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C34283)

## நன்றி! நன்றி!! நன்றிகள் பல!!!

ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்திலே 27.03.2004 அன்று மங்களகரமாக, முதன்மையாக, நல்ல ஒளிமயமாக நடைபெற்ற எங்களது திருமண நிகழ்வின் பங்காளர்கள் மற்றும் அன்பு நெஞ்சங்கொண்ட அனைவருக்கும் எமது இதயங் கனிந்த நன்றிகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மணமக்கள்
திரு.திருமதி மனோகரன் வசந்தமாலா

கைதடி.
(30562)(34-14-18)

## Dialog GSM

டயலொக்
கையடக்க GSM
தொலைபேசி அட்டைகளை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**Sri Murugan**
Tele Communication
& Agency Post Office,
303, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 5392
Fax: 222 3214.
Email: del-smskr@eureka.lk

எந்நேரமும் உன்னுடன்.....!

(C/34265) (26-34-14-18)

## "மகாநதி" வழங்கும் புத்தாண்டுச் சிறப்புத் தள்ளுபடி

**10% முதல் 20% வரை**

வாடிக்கையாளர்களே!
இந்தச்சலுகை 13-04-2004 வரை மட்டுமே!
இன்றே விரையுங்கள்! கையிருப்பு சொற்பமே!
அழகுக்கு அழகு செய்யும் அலங்காரமான
ஆடை வகைகளின் சங்கமம்

# மகாநதி புடைவையகம்

இல.04, நவீன சந்தை,
சாவகச்சேரி.

இல.16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சாறி பிளவுஸ் பீஸ் வகைகளுக்குப் பிரத்தியேகக் காட்சியறை
இல.16, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
☎ 222 2552

(சீ/34282)(34-14-18)

## மனமுவந்து பாராட்டி உவகையுடன் வாழ்த்துகின்றோம்



க.பொ.த.சாதாரண
தரப் பரீட்சை 2003 இல்
10 பாடங்களிலும்
A பெற்றுச் சித்தியடைந்தவரான
கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவி
செல்வி
சிந்துஜா மதுரநாயகம்

அவர்களை மனமுவந்து பாராட்டி உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

இவருக்கு ஆர்வமுடன் அறிவு புகட்டி வழிகாட்டிய ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். இவர் இன்னும் பல வெற்றிகளீட்டிச் சாதனை படைக்கப் பரம்பொருளான இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- பெரியன்ரா. சித்தப்பா. தீபன் அண்ணா.
சஜந்தி. ஜனா. மதுரா. உமா அன்ரி.
சித்தப்பா கிருஷ்ணா. அபிராமி.

திருமதி பத்மா நாகலிங்கம்,
சக்தி அம்மன் கோயிலடி,
தும்பளை, பருத்தித்துறை.
(C34276)(34-14-18)

## SALE

எமது ஸ்தாபனம் ஆரம்பித்து மூன்று ஆண்டுகளை நிறைவு செய்துள்ள
இந்த மகிழ்ச்சிகரமான வேளையிலே
மாபெரும் விசேட தள்ளுபடி 13.04.2004 வரை

**எமது வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!**

நீங்கள் கொள்வனவு செய்யும் விலையிலிருந்து
விசேட தள்ளுபடி **10%**

- ※ திருமண முகூர்த்தப் பட்டுப்புடைவைகள்
- ※ நவநாகரிக நாரீமணிகளுக்கேற்ற புத்தம் புதிய சாறி வகைகள்
- ※ ஆடவருக்கேற்ற சேட்டிங், சூட்டிங் வகைகள்
- ※ சிறுவர் சிறுமியருக்கேற்ற றெடிமேட் ஆடைகள்
- ※ வகை வகையான துணி வகைகள்

SALE

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
☞ ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

வாணி ரெக்ஸ் SALE
81, GRAND BAZAAR,
JAFFNA.
021 222 5578.

இல.10.11
நவீன சந்தை, சாவகச்சேரி.

(34-14-18)(C34086)



உதயன்

## அரசமைப்பை மீறி அரசமைப்பு மாற்றமா?

நேற்றுமுன்தினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதில் முக்கியமானதொரு விடயத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கும் விதத்தில் அரசமைப்புச் சீர்திருத்தப்படும். அதனைச் செய்வதற்காக அரசமைப்பு நிர்ணய சபையை உடனடியாக அமைப்பதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம்." - என்று ஜனாதிபதி அறிவித்திருப்பது சட்டவல்லுநர்களைத் திகைப்பில் ஆழ்த்தியிருக்கின்றது.

நாட்டின் மிக உயர்ந்த சட்டமாக - அடிப்படைக் கோட்பாடாக - மதிக்கப்படுவது அரசமைப்பு. அந்த அரசமைப்பைப் போற்றிப் பாதுகாப்பேன் என்று உறுதியுரை எடுத்துத்தான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட பணியாற்றுகின்றார். நாட்டின் சட்டமாக்கும் அதிகாரமுடைய நாடாளுமன்றம் தொடக்கம் நீதியை நிலைநாட்டுகின்ற நீதிமன்றங்கள் வரை அனைத்துமே அரசமைப்பை உச்ச வழிகாட்டியாகக் கொண்டே இயங்குகின்றன.

அந்த அரசமைப்பில் அதனை மாற்றுவதற்கு அல்லது சீர்திருத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அரசமைப்பின் பொதுவான ஏற்பாடுகளை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவும் -

விசேடமான சில ஏற்பாடுகளை அல்லது முழு அரசமைப்பை மாற்றுவதற்கு அந்த ஆதரவுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அங்கீகாரமும் -

அவசியம் என்று தற்போதைய அரசமைப்பு தெளிவாகக் கூறுகின்றது.

ஆனால், நாடாளுமன்றத்தில் ஒரு ஸ்திரமான அரசை அமைப்பதற்கான - தெளிவான - அறுதிப் பெரும்பான்மைகூட இல்லாமல் அல்லாடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை வைத்துக்கொண்டுதான் இந்த அரசமைப்பை மாற்ற முயல்கிறார் ஜனாதிபதி; நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க எத்தனிக்கிறார் ஜனாதிபதி.

அதாவது, இப்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளைத் தூக்கி வீசிவிட்டு தான்தோன்றித்தனமாகப் புதிய அரசமைப்பைக் கொண்டு வரத் திட்டமிடுகின்றார் அவர்.

அதற்கு, இலங்கையின் நீதிமன்றங்கள் அனுமதி அளிக்குமா என்பது முதல் கேள்வி.

இந்த நீதிமன்றங்களைச் செயற்படுத்துவது - அல்லது அவை செயற்படுவது - இந்த அரசமைப்பின் கீழ்தான்.

ஆகவே, இந்த அரசமைப்பு ஏற்பாடுகளைப் புறந்தள்ளி, வேறு வழியில் புதிய அரசமைப்பு ஒன்றைத் தம் விருப்பப்படி ஜனாதிபதியும் அவரது அணியினரும் கொண்டுவருவதற்கு நீதிமன்ற அனுமதி கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.

"புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான அரசமைப்பு நிர்ணய சபை ஒன்றை உருவாக்குவோம் என்று கூறியே கடந்த தேர்தலில் மக்களிடம் வாக்குக் கேட்டோம். அந்த அடிப்படையிலேயே அரசு அமைக்கின்றோம். புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான ஆணையை எங்களுக்கு மக்கள் தந்துள்ளனர். ஆகவே, தற்போதைய அரசமைப்புக்கு வெளியில் நின்று புதிய அரசமைப்பை உருவாக்கும் தார்மீக அதிகாரம் எங்களுக்கு உண்டு" - என்று ஜனாதிபதி தரப்பில் கூறப்படலாம்.

ஒன்று - அந்த வாதத்தைச் சட்ட ரீதியானதாக நீதிமன்றம் ஏற்பதற்கு வாய்ப்பில்லை.

இரண்டு - அந்தக் கோரிக்கையை வைத்துப் போட்டியிட்ட ஐ.ம.சு. கூட்டமைப்புக்கு மக்கள், நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைக் கூட வழங்கவில்லை என்பதுதான் உண்மை.

இத்தகைய நிலையில் அரசமைப்பைத் தான்தோன்றித்தனமாக மாற்றமுயலும் ஜனாதிபதியின் நடவடிக்கை எவ்வளவு தூரம் நியாயமானது என்ற கேள்வி எழுகிறது.

தற்போதைய அரசமைப்புப்படி ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் இருக்கமுடியாது. அந்தவகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அதிகாரம் அடுத்த ஓரிரு வருடங்களுக்குள் முடிவுக்கு வருவது தவிர்க்கமு ,யாதது. அதன்பின் அந்த அதிகாரம் அவரை வி'_டு வேறு ஒருவரின் கைக்கு மாறுவதும் தவிர்க்கமுடியாதது.

எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கவும், தானே தொடர்ந்து அதிகாரத்தில் இருக்கக்கூடியதான ஓர் ஆட்சி முறையை அறிமுகப்படுத்தவும் துடியாய்த்துடிக்கிறார் ஜனாதிபதி.

ஒரு ஜனநாயக நாட்டில் அப்படி அவர் செய்ய முயல்வது தப்பில்லை. ஆனால், அதற்கான வழிமுறை ஜனநாயக நெறிமுறைக்கு உட்பட்டதாக இருக்கவேண்டியது அவசியம் என்பதை அவர் மறந்துவிடக்கூ_ாது.

# கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவின் தலைவராக இரா.சம்பந்தன் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.9

வடக்கு - கிழக்கில் அமோக வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவான தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்களின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக இரா.சம்பந்தன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கூட்டமைப்பின் இணைப்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுமுன்தினம் இதனைத் தெரிவித்தார்.

'உதயன்' செய்தியாளரிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் உடனடியாக வழங்கப்படவேண்டும் என்பதற்காகத் தமிழ்க் கூட்டமைப்புத் தொடர்ந்து போராடும்.

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன விடயங்களைக் குறிப்பிட்டுள்ளோமோ அதன்படியே வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து செயற்படுவதற்கு உறுதிபூண்டுள்ளோம்.

கொழும்பில் கூடிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக இரா.சம்பந்தனை நாடாளுமன்றக் குழுத் தலைவராக நியமித்துள்ளோம். கிழக்கைச் சேர்ந்த அவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதுகூட தற்போதைய நிலையில் ஆரோக்கியமான விடயந்தான்.

கொழும்புக் கூட்டத்தில் பல்வேறு விடயங்களும் ஆராயப்பட்டன. தமிழ்க் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து செயற்படுவதன் அவசியம், தமிழர் தாயகக் கோட்பாடு, வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள் தொடர்ந்து இணைந்திருப்பதன் அவசியம், இடைக்கால நிர்வாக அமைப்பைப் புலிகளிடம் வழங்கவேண்டியதன் தேவை என்பன பற்றி அங்கு விரிவாக ஆராயப்பட்டன.

வடக்கு - கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு இடைக்கால நிர்வாக அமைப்பு மிக அவசியம். கிடைக்கும் வெளிநாட்டு நிதி உதவிகளைக் கையாளும் வகையில் அந்த நிர்வாகத்துக்கு அதிகாரங்கள் இருக்கவேண்டும் என்று கூட்டத்தில் அதிகம் வலியுறுத்தப்பட்டது - என்றார் சுரேஷ்.

1997ஆம் ஆண்டுக்குப் பின்னர் மிகக் கூடுதலான தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டம் இதுதான் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசியம், தாயகக் கோட்பாடு போன்ற விடயங்களில் மிகத் தெளிவாக உள்ளார்கள். முரண்பாடுகள் எவையும் அவர்களிடம் இல்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் குறிப்பிட்டார்.

இதவேவேளை -

கொழும்பில் சந்தித்துப் பேசிய பின்னர் 20 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இனப்பிரச்சினைக்கான ஓர் இடைக்கால அல்லது இறுதித் தீர்வில் வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் சகோதரர்களின் அபிலாசைகள் அவர்கள் திருப்தி அடையக் கூடிய வகையில் தீர்க்கப்படவேண்டும் என்பதில் தாம் அக்கறை கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-ரி)

# குடாநாட்டில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை நிவர்த்தி செய்வதற்கு விசேட ஏற்பாடு

## சமூக நலன்புரி அமைச்சு நிதி வழங்குகிறது

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர்ப் பற்றாக்குறையை நலன்புரி அமைச்சின் நிதி உதவியுடன் நிவர்த்தி செய்வதற்கு யாழ். மாவட்ட செயலகம் விசேட ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த மாதம் முதல் நிலவிவரும் கடும் வெப்பம் காரணமாகக் குடாநாட்டின் சில பகுதிகளில் குடிதண்ணீருக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, நெடுந்தீவு, வேலணை, காரைநகர், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை மற்றும் கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் கடும் வரட்சி காரணமாக நீர்நிலைகள் வற்றத் தொடங்கியுள்ளன.

இதனால், இப்பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனைத் தவிர்க்கும் வகையிலேயே நல ன்புரி அமைச்சின் நிதியுதவியுடன், இப்பிரதேசங்களுக்குட் பவுசர் மூலம் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி குடிதண்ணீர் விநியோகத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு சாவகச்சேரி, கோப்பாய், வேலணை, ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு, காரைநகர் ஆகிய பிரதேசங்களின் பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள், பிரதேச சபைகளின் செயலர்கள் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-5)

# யாழ். நீதிமன்ற வளாகக் கட்டடம் நிறுவும் பணிகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ். நீதிமன்ற வளாகத்துக்கான கட்டடம் அமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பமாகின. அடுத்தவருடம் ஒக்ரோபர் மாதத்தில் கட்டடப் பணிகள் பூர்த்தியடையும்.

உலகவங்கி வழங்கியுள்ள ஒருகோடி ரூபாவில் அமைக்கப்படவுள்ள நீதிமன்ற வளாகக் கட்டடப் பணிகளைச் சர்வதேச கட்டட ஒப்பந்தகார நிறுவனம் ஒன்று மேற்கொள்ளவுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள நீதிமன்ற வளாகத்துக்கு அடுத்தபடியாக பெரிய கட்டடமாக இந்தக் கட்டடம் அமையவிருக்கின்றது.

கட்டடம் அமையவிருக்கும் பிரதேசத்தை ஒப்பந்தகாரரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா, யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா", யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். உலகவங்கி அதிகாரிகளும் இதில் பங்குபற்றினர்.

வளாகம் அமையவிருக்கும் பகுதியிலுள்ள பழைய கட்டடங்களை முற்றாக இடித்து அகற்றுவதற்கு ஒருமாதம் செல்லும் என்றும் -

கட்டடப்பணிகள் பூர்த்திசெய்யப்பட்டு அடுத்தவருடம் ஒக்ரோபர் மாதத்தில் நீதிமன்ற வளாகம் உரியவர்களிடம் கையளிக்கப்படும் என்றும் கையளிப்புக்கு முன் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஒப்பந்தகாரர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண தமிழ்க் கலாசாரத்தை எடுத்துக்காட்டும் வகையில் கட்டடம் வடிவமைக்கப்படவுள்ளது. மூன்று தளங்களைக் கொண்டதாக வளாகம் அமையும். கீழ்த் தளத்தில் இரண்டு மாவட்ட நீதிமன்றங்களும், இரண்டு நீதிவான் நீதிமன்றங்களும் இயங்கும்.

அடுத்த தளத்தில் இரண்டு தொழில்நீதிமன்றங்களும் இரண்டு மேல் நீதிமன்றங்களும் செயற்படும். மேல்தளத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இயங்கும். யாழ். மாவட்டத்தில் முதற்றடவையாக மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (எ-3)

# தென்மராட்சி தெற்கின் சில இடங்களில் மீளக் குடியமர படையினர் அனுமதி

தென்மராட்சி,ஏப்.9

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் உள்ள மறவன்புலோ, கைதடிநாவற்குழி, கோவிலாக்கண்டி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த பொதுமக்கள் அடுத்த வாரம் முதல் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் என்று படைத்தரப்பால் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் 523 ஆவது படைப்பிரிவின் சிவில் நிர்வாக அதிகாரி இது தொடர்பாக அப்பகுதிகளின் கிராம அலுவலர்களுக்கு அறிவித்துள்ளார் என்று கூறப்பட்டது.

எதிர்வரும் 12ஆம் திகதி மறவன்புலோ பிரிவில் தோப்பு பிள்ளையார் ஆலயச் சுற்றாடலில் மீளக்குடியமர அனுமதி அளிக்கப்படும்.

பின்னர் கைதடிநாவற்குழி பிரிவில் 40 குடும்பங்களும் கோவிலாக்கண்டிப் பிரிவில் 12குடும்பங்களும் கட்டங்கட்டமாகக் குடியமர்த்தப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதற்கான தெளிவான திகதிகள் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் காரணமாக இப்பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். தங்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு அவர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி கடந்த சுதந்திர தினத்தன்று இந்தப் பகுதிகளையும் இதனை அண்டியுள்ள பகுதிகளையும் சேர்ந்த மக்கள் உண்ணாவிரதம் மற்றும் மறியற் போராட்டங்களையும் நடத்தியிருந்தனர். (ம-117)

### நாளை

பங்குனி 28
சனிக்கிழமை
(10.04.2004)
திதி : ஷஷ்டி
பின்னிரவு 4.23 வரை.
நட்சத்திரம் : கேட்டை
பகல் 12.26 வரை
சுபநேரம்: 3.06 - 4.36
ராகுகாலம்: 9.06 - 10.36
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பாதை வகுத்த பின்பு பயந்தென்ன லாபம். அதில் பயணம் செய்துவிடு. தீர்ந்திடும் சோகம்.

# யாழ். கல்வி வலய மாணவர்களின் கணிதப் பெறுபேறு வீதம் உயர்கிறது

## வலயக் கல்வி அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி யாழ். வலயப் பாடசாலைகளின் கணிதபாடப் பெறுபேற்றில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 2 சதவீதம் பெறுபேற்று வீதம் அதிகரித்துள்ளது என யாழ். வலயக் கல்விப் பணிமனையின அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

குடாநாட்டுப் பாடசாலைகளில் கடந்த ஆண்டுகளில் பெரும் வீழ்ச்சி அடைந்து காணப்பட்ட கணித பாடப் பெறுபேறு கடந்த மூன்று ஆண்டுகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக படிப்படியாக அதிகரித்து வருகின்றது என்றும் -

இதன்படி, யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் கணிதபாட பெறுபேறு 2002 ஆம் ஆண்டு 49 வீதமாகவும், 2003 ஆம் ஆண்டு 51 வீதமாகவும் காணப்பட்டது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும், கடந்த இரண்டு ஆண்டுகளில் நிலவிய அமைதிச் சூழ்நிலையில் மாணவர்களின் கல்வி வசதிகளோடு ஒப்பிடும் போது கணித பாடப் பெறுபேற்று வீதம் மந்தமான நிலையிலேயே உள்ளது என்றும் - அந்த அதிகாரி மேலும் கூறினார். (எ-6)




# யாழ் மண்ணில் விண் தொடர்பு

"துராயா" செய்மதி தொலைப்பேசி (GSM, GPS உடன்)

- ✼ 99 நாடுகளுடன் உடன் நேரடி இணைப்பு.
- ✼ மேலும் 85 நாடுகளுடன் GSM இணைப்பு.
- ✼ வரும் அழைப்புகள் இலவசம்.
- ✼ துராயா-துராயா தொடர்பு விசேட கட்டணம்.
- ✼ முதல்/ பின் பணக் கொடுப்பனவு வசதி, விரும்பில்.

~~Rs.66,000/=~~

10% புத்தாண்டு கழிவு




THURAYA

டயலொக் SAT


141, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு: 0777 332227, 0777 331336, 0212 226223

# சைவத்தமிழ்ப் பணிகளில் இளையோரை பங்குபெற வைத்த சைவ மாநாடு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த மாதம் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் நடத்தப்பெற்ற அகில இலங்கைச் சைவ மாநாடு சைவமக்களிடையில் புத்துணர்வையும், விழிப்புணர்வையும், சிந்தனையையும் ஏற்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும்.

மூன்று நாள்களும் காலையில் ஓர் அமர்வாகவும் பிற்பகல் பிறிதொரு அமர்வாகவும் மாநாடு நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சைவத்தமிழ் அறிஞர்கள், ஆசிரிய கலாசாலை, கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பல்வேறு நிலைகளிலும் உள்ளவர்கள் நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தனர்.



புராணபடனக் காட்சி

முதல் நாள் நிகழ்வு வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் பூசை வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்டது. அன்று காலை அமர்வினுக்கு யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமை தாங்கினார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அருளுரை வழங்கினார். அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபைத் தலைவர் க.கிருபானந்தக் குருக்கள் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து கலாநிதி ம.வேதநாதன், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் என்பவர்களின் விரிவுரைகளும் இடம்பெற்றன.

அன்றைய காலை நிகழ்வின் சிறப்பம்சமாக சைவபரிபாலன சபையினால் கடந்த ஆண்டு நடத்தப்பெறற சித்தாந்த பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தோர்களுக்குப் பட்டம் வழங்கும் நிகழ்வும் பரிசளிப்பும் இடம்பெற்றது.

சைவப்புலவர்
**மு.திருஞானசம்பந்தபிள்ளை**
செயலாளர்,
யாழ். சைவபரிபாலன சபை.

முதலாம் நாள் மாலை நிகழ்வு மங்கையர் மாநாடாக மிளிர்ந்தது. திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், திருமதி நாச்சியார் செல்வநாயகம், பண்டிதை பொன்.பாக்கியம் ஆகியோர் சைவ சமயக் கல்வியில் பெண்களின் பங்கு பற்றிக் கருத்துரை வழங்கினர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் கலை நிகழ்ச்சிகள் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் இடம்பெற்றன. இந்த அமர்வில் "2ஆம் நூற்றாண்டில் சைவப் பாடசாலைகளில சைவம்", "சைவ ஆலயங்களின் பரிபாலனம்", சைவ சமயச் சடங்குகளில் நிலை" என்னும் தலைப்புகளில் முறையே செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், ஆசிரியர் இரா.செல்வவடிவேல், சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் காத்திரமான கருத்துக்களை வழங்கிப் பார்வையாளரையும் சைவ மக்களையும் சிந்தித்துச் செயலாற்ற வழிகோலினர்.



கரகாட்டம்: யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவிகள்.

மாலை நிகழ்விற்கு 'இந்துசாதனம்' பத்திராதிபர் சுடர் இ.மகேந்திரன் தலைமை வகிக்க, யாழ். கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் 'சைவத்தின் வளர்ச்சியில் இன்றைய இளைஞர்களின் பங்களிப்பு" என்ற தலைப்பல் சபையினரின் பாராட்டைப் பெறத்தக்கதான கருத்துக்களை முன்வைத்தனர்.

மூன்றாம்நாள் காலை நிகழ்விறகு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம் தலைமை வகிக்க "திருநெறிய தமிழ்" பற்றி சைவப்புலவர் ஏ.அனுசாந்தனும், திருமுறை காட்டும் வாழ்வு' பற்றி பண்டிதர் வ.பேரின்பநாயகமும் உரையாற்றினர்.



ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினரின் வில்லிசை

இறுதிநாளாகிய ஞாயிறு மாலை நிகழ்வுகள் சைவபரிபாலனசபையின் தலைவரும் சபையின் பரீட்சைச் செயலாளருமான சைவப் புலவர் வ.கந்தசாமி தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்விற்குப் பிரதமவிருந்தினராகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கலந்து சிறப்பித்தார்.

விசேட சொற்பொழிவாளராக ச.விநாயகமூர்த்தி, கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆகியோர் விரிவுரையாற்றி சபையோரை மகிழ்வித்தனர். இவ்வமர்வின் முக்கிய நிகழ்வாக கடந்த ஆண்டு சைவபரிபாலன சபையினர் நடத்திய சைவநெறித் தேர்வில் சித்தியடைந்த அகில இலங்கை மட்டப் பரிசுபெறும் மாணவர்களுக்குத் தங்கப்பதக்கங்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

மூன்றுநாள் மாநாட்டின்போது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆகியவற்றின் மாணவர்களின் நிகழ்ச்சிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் மூன்றுநாளும் இறுதி நிகழ்வுகளாக முறையே கதாப்பிரசங்கம், வில்லிசை, நாடகம் என்பன மாநாட்டிற்கு சிறப்பை ஏற்படுத்தின.



கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பரிசில் வழங்குகிறார்.

மாநாட்டிற்கு வருகைதந்து கலந்து கொண்ட அன்பர்களுக்கு மதியபோசனம், தேநீர், குளிர்பானம் வழங்க வர்த்தகப் பிரமுகர்கள் உதவியமையும் குறிப்பிடத்தக்கது.

இம்முறை நடைபெற்ற சைவ மாநாடு யாழ்ப்பாண சைவசமூக அனைத்து உறுப்பினர்களையும் ஒன்றிணைத்து சிறப்பாக - மன நிறைவாகப் புத்தெழுச்சியுடன் நடைபெற்றமை பாராட்டத்தக்கதாகும். சைவத் தமிழ்ப்பணியில் எதிர்காலச் சந்ததியினரை - இளந்தலைமுறையினரை ஈடுபடச்செய்வதை நோக்கமாகக் கொண்டு அனைவரும் உழைப்போமாக. *

## ஞானக்கதிர்

# ஆழ்ந்து சிந்திக்கவைக்கும் யோகரின் மகாவாக்கியங்கள்

'சிவானுபூதிச் செல்வர் சிவயோக சுவாமிகள்' என்ற தலைப்பில் கடந்த வாரம் ஞானச்சுடர் பகுதியில் வெளியான கட்டுரையின் இறுதிப்பகுதி இன்று பிரசுரமாகிறது.

**அது** அருட்கொடை. ஆகவே, அநுபூதி நலத்தை நாடியவராய் ஆசான் அருள் ஒன்றிற்கே ஆசை வைத்து நின்றார். பிறந்த பச்சிளம் குழந்தைக்குப் பசி வந்துற்றது. அது பாலைநாடித் தன் மலர் இதழை விரிக்கிறது. தன் உணர்வாய், உயிராய்த் தாறாயிருந்து உதித்த குழந்தையின் பிஞ்சுமுகம் நோக்கித் தாயிடத்து இருந்து பால், இரங்கிச் சொரிகிறது.

லௌகீக உலகில் இத்துணை எனின், அருளே வடிவான ஆசானிடத்து கருணை எத்திறத்து! செல்லப்பத் தேசிகர் சிவயோகர் தொடும் அளவு கிட்டவந்து 'குன்றுபோல் நிற்கிறார். அவர்தம் திருமுகம் முற்றிச் சுருக்கும் கருணை பூத்ததாய்ப் பொலிவடைகிறது. தம் ஞானப் புதல்வனுக்கு முடிசூட்டும் உவகையால் பொங்கியது அவர்தம் ஞானச் சுடர்விழி அன்பரை உற்று நோக்கியது.

அந்த நோக்கு நோக்கம் ஒன்றள நோக்கும் நோக்கத்தைச் சீடரிடம் பாய்ச்சியது. அவர் நால்வேதம் நவிலும் நா. ஒரு பொல்லாப்பும் இல்லை என்னும் பெரும் பெயரை (மகாவாக்கியம்) அப்பெரும் பெயர் சுட்டும் பொருளை ஒரு நொடியில் எழுப்பும் ஒலியை ஒலித்தது. அப்பெரு மந்திர ஓசை அன்பர் தம் சிந்தை குளிரும் வண்ணம் நிறைந்தது. செல்லப்பரின் சின்மயான கரம் அன்பரைத் தொட அது மின் தீண்டுதல் போல் அன்பரை வெட்டவெளியில் விட்டது. தேசிகரின் வலதுகரம் தலத்தைச் சுட்டிக்காட்டியது. தலைத்தலம் என்பது ஆதாரம், ஆதேயம் அனைத்துமான திருவடித் தலமே சிவயோகச் செல்வருக்குச் சந்தேகம் யாவும் தீர்ந்தன.

**- சிவதொண்டர் -**

அலைந்து நின்ற மாயை அகன்றது. அவருக்கு அருவமான மாயையும் அம்மாயையின் அலக்களிப்பால் தோன்றும் பலபலவான உருவங்களும் இப்பலபல உருவங்களையெல்லாம் தோற்றுவிக்கும் மாயை இயக்கும் அருளின் வண்ணமுமான மர்மங்கள் எல்லாம் வெளியாயின. அவர் அருள்வண்ணத்தைக் கண்ணாரக் கண்டதுடன் அந்த அருளுக்கு அப்பாசக்கப்பலாய் உள்ள சோதி சொரூபத்தையும் தரிசித்தார்.

தன்னை மறந்தார்; உற்றார், பெற்றார், உடன்பிறந்தாராகிய பிரியாப்பிரியம் எல்லாம் பேசாநின்றன. சோதி, சோதி என அச்சிவசோதியில் பூண்டு கிடந்தார். சும்மா இருக்கும் சூட்சுமத்தில் பூண்டு கிடந்தார். இந்நிகழ்வுகள் வரிவடிவம் பெற சிலகணம் சென்றது. எனினும், அவையெல்லாம் சிவயோகருக்கு ஒரு கண்ப்பொழுதில் நடந்தேறின. ஆழியை அழுத்திய அம்மாத்திரத்தே மின் ஒளி இடமெங்கும் செறிவதுபோல் சிவானுபூதியில் செல்லப்பர் சிவயோகரை சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டி விட்டனர்.

செல்லப்பர் செய்த இத்தீட்சை கிரியாவாதியான தீட்சை என்று. அது ஆரும் அறியாது அந்தரங்கமாகச் செய்த ஞானதீட்சை. அதாவது, நல்லூர்த் தேரடியில் தீட்சை மண்டபம் ஏதும் இடம்பெறவில்லை. செல்லப்ப தேசிகர் வாசனை நீராடி, செம்பட்டாடை உடுத்து சீரிய ஆசனத்தில் தென்முகம் நோக்கி அமர்ந்து இவ்வாறான கிரியை ஏதும் செய்யவில்லை. ஒரு நோக்கு, ஒரு மொழி, ஒரு தொடுகை, ஒரு கைகாட்டுதல் ஆகியன கொண்ட ஒரு கணத்து அழகிய ஆடலால் அத்தீட்சையைச் செய்தனர்.

### யாம்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்

சிவயோகருக்கு வாய்த்த அனுபவம் தேசம், காலம் யாவையும் கடந்த அனுபவம். இரவு, பகல் அற்ற ஏகாந்த வீட்டில் பரவிப் பணியவைக்கும் அனுபவம். ஆயினும், இந்த அனுபவத்தில் நுழையவைத்த செல்லப்பரையும், இடமான நல்லூர்த் தேரடியையும் பங்குனி மாதத்து இரண்டாவது திங்கள் நாளையும் சுவாமி ஒருபோதும் மறந்ததில்லை.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவவையகம்" என்னும் முதுமொழிக்கமைய தாம் அருள்பெற்ற தினத்தை நினைவுகூரும் முகமாக அத்தினத்தைத் திருவடிப் பூசைத் தினமாகக் கொண்டாடி வந்தார். தம் தடந்த தேகத்தை உடுத்து சோதி சொரூபமாக நிலைப்பதற்குரிய நாளாகவும் அந்நாளையே தேர்ந்தெடுத்தார். *



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆத்மீகச் சஞ்சிகை நடத்திய வாசகர் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளுடன் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது. (படம்: வடமராட்சிச் செய்தியாளர்)

## சதுரங்கப் பயிற்சி வகுப்பு

சிறுவர்களுக்கான சதுரங்கப் பயிற்சி வகுப்பு 14.04.2004இல் ஆரம்பமாக விருக்கின்றது. பாடசாலை அணிகளில் உள்ள வீரர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படும். கணனிமூலமும் பயிற்சி வழங்கப்படும். பயிற்சி வகுப்பில் கலந்துகொள்பவர்களுக்கு,

1. Chess C.DS 2. Chess Books 3. Chess Sets
4. Chess Record Books 5. Chess tutes என்பன இலவசமாக வழங்கப்படும். இதற்கான பதிவுகளை 12.04.2004 இற்கு முன்னதாகப் பின்வரும் முகவரியில் மேற்கொள்ளவும்.

திரு.சி.வித்தியாதரன், *05, வைமன் வீதி, நல்லூர்.* (30647)(24-34-14-19)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



**உயர்திரு.கி.சிவநேசன் (நா.உ.)**

உழைப்பவர் வாழ்வுயர உன்னத நிலையடைய களைப்பின்றி உழைத்திட்ட உத்தமன் சிவநேசன் நாடாளுமன்றம் தெரிவானமையினையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

இ.வல்லிபுரம் J.P.
(இமையாணன்),
ஓய்வுபெற்ற அதிபர்.

*"ஜெயமகால்",*
*மானிப்பாய் வடக்கு,*
*மானிப்பாய்.*
(30644)(34-14-19)

## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
## க.பொ.த.(சா/த.) டிசெம்பர் 2003 பெறுபேறுகள்

1. ஜெயராஜ் றஜீவன் - 10A
2. பாலசந்திரன் விஜிதரன் - 8A, 2B
3. அரியம் கோகுலரமணன் - 8A, 1C, 1S
4. அரசரட்ணம் ஜனார்த் - 7A, 1B, 2C
5. தில்லைநாதன் யதுபாலதரன் - 7A, 1B, 2S
6. கனகசபை கோகிலன் - 5A, 2B, 3C
7. சூசைநாதர் சுஜீபன் - 5A, 2B, 1C, 1S
8. பாலசந்திரன் சுஜிதரன் - 5A, 1B, 4C
9. குலேந்திரன் கணேசானந்த் - 4A, 5B, 1C
10. நாவேந்தன் அகிலன் - 3A, 2B, 4C
11. வரதராஜா ஸ்ரீரங்கன் - 3A, 1B, 4C, 2S
12. மகேந்திரன் சுதர்சன் - 3A, 1B, 5C
13. குகனேஸ்வரன் மயூரன் - 3A, 2B, 2C, 3S
14. பத்மராசா ஜனார்த்தன் - 3A, 1B, 1C, 2S
15. அருமைநாதன் அஜியந்தன் - 3A, 1B, 2C, 3S
16. ஜெகநாதன் அகிலவரதன் - 3A, 2C, 3S
17. அரியநாயகம் அஜித் - 3A, 2C, 3S

(C/34332)(34) **அதிபர், ஆசிரியர்கள்.**

JSAC

யு.என்.ஏச்.சி.ஆரின் நிதி அனுசரணையில்
யாழ். சமூகசெயற்பாட்டு மையத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட
சுயதொழில் பயிற்சித் திட்டத்தின் நிறைவு நாளை முன்னிட்டு

## மாபெரும் கண்காட்சியும் மலிவு விற்பனையும் 2004

தலைமை: திரு.கு.வி. நிஷாந்தன (*இணைப்பாளர் சமூகசெயற்பாட்டு மையம்*)
இடம்: சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சங்கத்தானை.
காலம்: 09-04-2004 முதல் 12-04-2004 வரை
நேரம்: காலை 10.00 மணி
பிரதம விருந்தினர்: திருமதி ப.திலகநாயகம (மேலதிக அரசாங்க அதிபர். யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்கள்:
செல்வி சோபியா (இணைவெளிக்கள உத்தியோகத்தர்.யு.என்.எச்.சி.ஆர்.)
திரு.எம்.எஸ்.சரவணபவ (விசேட ஆணையாளர். சாவகச்சேரி)
திரு.எஸ்.எஸ்.அருளானந்தம் (வர்த்தக சங்கத் தலைவர்)
செல்வி ந.அன்பு (அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர். தென்மராட்சி)
திரு.எஸ்.அம்பிகைபாகன் (மாவட்ட வைத்திய அதிகாரி. சாவகச்சேரி)
திரு.இ.கைலைநாதன (அதிபர். சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

மாணவர்களின் கைத்திறனைக் காண எங்கள் பணியில் இசைந்திட அனைவரையும் அன்புடன் இனிதே அழைக்கின்றோம்.

யாழ். சமூக செயற்பாட்டுமைய உத்தியோகத்தர்கள்

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்.
159 4ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம். தொலைபேசி 222 3699.

யாழ்.சமூக செயற்பாட்டு மைய உப அலுவலகம்.
கச்சாய் வீதி. சாவகச்சேரி.

(சி.34321)(26-34-14-19)

விளம்பர அனுசரணை: **லேசர் பிளேட் மற்றும் கில்சவர்க்கார பொருள்களின் வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்**
க.கனகசபாபதி, 92,பழம்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே. இல. 021 222 6734.

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 2004.04.20 ஆம் திகதி பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஆர்வமுடையோர் கேள்விப்படிவங்களை 2004.04.14 இலிருந்து 2004.04.20 வரை குறிப்பிட்ட வேலைகளுக்கெதிரே உள்ள வைப்புப் பணத்தினையும் படிவக்கட்டணத்தையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் 2004.04.20 பி.ப.2.30 மணிக்குத் திறக்கப்படும்.

| *வேலை விவரம்* | *கேள்விப் படிவக் கட்டணம் வற் வரி உட்பட* | *மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம்* |
|---|---|---|
| 1. உந்துவத்தை வீதி திருத்தம் | 575.00 | 5000.00 |
| 2. வாவினி வீதி திருத்தம் | 575.00 | 5000.00 |

மேலதிக விவரங்களை வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ.எம்.ஜோசெப்
செயலாளர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
06.04.2004. (C/34279)(34-14-19)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.9

உடுவில் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 3 ஆம் திகதி ஆரமபமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

உற்சவதினங்களில் தினமும் மாலை 7மணிக்கு கந்தபுராணம் என்னும் பொருள் பற்றி சைவப்புலவர் நித்திய தசீதரன் தொடர் சொற்பொழிவாற்றி வருகிறார். (எ-ரி)

★ ★ ★

குடத்தனை,ஏப்.9

பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் ஆலய குளிர்த்தி அபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9மணிக்கு 108 கலச சங்காபிஷேகம் ஆரம்பமாகும்.அதனைத் தொடர்ந்து அபிஷேகம் நடைபெற்று 11.30மணிக்கு விசேடபூஜை நடைபெறும். (எ-ரி)

★ ★ ★

நவாலி,ஏப்.9

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்தி அபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

முருகனுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும்,சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (எ-100-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.9

சித்தங்கேணி ஸ்ரீநாககன்னி அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள்தின அஷ்டோத்திர சங்காபிஷேகம் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவு,தெய்வீகப் பாமாலை ஓதுதல் என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (எ)

★ ★ ★

சுழிபுரம்,ஏப்.9

பொன்னாலை சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

22 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ-28)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ் அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்திப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும், 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ)

## கூ.சங்க பணியாளர்கள் கௌரவிப்பு

மானிப்பாய்,ஏப்.9

மானிப்பாய் பலநோக்குக் கூ.சங்கத்தில் 25வருடங்கள் பணியாற்றித் தமது சேவையைப் பூர்த்திசெய்த 22 பணியாளர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

சங்கத்தின் தலைவர் மா.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி பணியாளர்களுக்குப் பொன்னாடை போர்த்திக்கௌரவித்தார். (ம-10-100)

## க.பொ.த.(உ.த.) - 2006

மேற்படி வகுப்புகளில் அனுமதிபெற விரும்பும் சகல மாணவர்களும் காரியாலயத்தில் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து 20.04.2004 இற்கு முன் கையளிக்கவும்.

21.04.2004 அன்று புதன்கிழமை க.பொ.த.(உ.த.) வகுப்புகள் ஆரம்பமாகும்.

யா/மானிப்பாய்
இந்துக் கல்லூரி.
-அதிபர்-
(C/34331)(34-14-19)

பல்லாண்டுகாலம் பல்கலையும் பெற்று
பாரினிலே வாழ்கவென

Lend a Hand

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கழகத்தினுடைய கௌரவ செயலாளராகிய
Rtr.
**மரியஷேளி அருளானந்தம்**

அவர்கள் 27.03.2004 ஆம் திகதியன்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 23 ஆவது பட்டமளிப்பு விழாவிலே கலைமாணி (B.A.) பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதையிட்டு இவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர் மேன் மேலும் சீரும்சிறப்பும் பெற்றுப் பல்லாண்டுகாலம் பாரினில் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**நல்லூர் றோட்டரக்ட் கழகத்தினர்.**
(சி-34333)(34-14-19)



உ
சிவமயம்

ஊரிக்காடு நிருவத்தம்பனை
தான்தோன்றிப் பிள்ளையார் தேவஸ்தானத்தில்
## அஷ்டோத்தரசத கலச சங்காபிஷேக பெருவிழா விஞ்ஞாபனம்

**விநாயகர் அடியார்களே!**

நிகழும் சுபமங்களகரமான பங்குனி மாதம் 27ஆம் நாள் இன்று (2004.04.09) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு கலச சங்காபிஷேகம் நடைபெறும். நண்பகல் 12.00 மணிக்கு மாகேஸ்வரபூசை (அன்னதானம்) இடம்பெறும்.

போதகாசிரியர்
கிரியாரத்தினம் சிவஸ்ரீ பாலபத்மநாதக்குருக்கள்
*(கெருடாவில் பிரதம குரு, மாரியம்மன், காளியம்மன் தேவஸ்தானம்)*

சங்காபிஷேக பிரதமகுரு
அருள்ஞானக் கிரியாமணி சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக்குருக்கள்
*(பிரதம குரு, மேற்படி தேவஸ்தானம், உடுப்பிட்டி வடக்கு, கொம்மந்தறை ஸ்ரீமனோன்மணி அம்பாள் திருக்கோயில்)*

சாதகாசிரியர்
சாதக உபயஞானபானு சிவஸ்ரீ இ.பாஷ்கரக்குருக்கள்
*(பிரதம குரு, தேவரையாளி கண்ணகை அம்மன், வீரபத்திரர் தேவஸ்தானங்கள்)*

தெய்வீகச் சொற்பொழிவு வழங்குபவர்
கவிமாமணி மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்
*(ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம்)*
விடயம்: "இந்துமதம் காட்டும் இறை தத்துவம்"

ஊரிக்காடு,
நிருவத்தம்பனை.
(30646)(24-34-14-19)

திருமதி இலட்சுமி அமிர்தலிங்கம்
(லண்டன் அம்மா)
சங்காபிஷேக உபயகாரர்.

## பிறந்தநாள் வாழ்த்து
HAPPY BIRTHDAY



ரவீந்திரன் - தேவகலா தம்பதியினரின்
செல்வப் புதல்வன்

## கவிநயன்

தனது முதலாவது பிறந்தநாளை ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் இன்று (09.04.2004) வெள்ளிக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா மற்றும் உடுப்பிட்டி, இமையாணனில் வசித்துவரும் அப்பப்பா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, மாமிமார், மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார் மற்றும் அண்ணாமார், அக்காமார் ஆகியோர் இவரைச் செல்வச்சந்நிதி முருகன் அருளால் பல கலைகளும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: திரு.திருமதி ரவீந்திரன்.

## சவுக்கு மரங்கள் அழிப்பு

குடத்தனை,ஏப்.9

குடத்தனை, மணற்காட்டுப் பகுதியில் இரவுவேளைகளில் சவுக்கு மரங்கள் விறகுக்காக வெட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள இந்த மரங்களைத் தினமும் இரவுவேளைகளில் சைக்கிள்களில் வருவோர் திருட்டுத்தனமாக வெட்டிச் செல்கின்றனர்.

மரங்களை வெட்டிச் செல்லும்போது பிரதான வீதிகளைப் பயன்படுத்தாது வெற்றுக்காணிகள், தோட்டங்கள் மற்றும் பற்றைகள் ஊடாகவே இவர்கள் சென்று வருகின்றனர். (ம-10-ரி)

## மருதடி விநாயகர் இரதோற்சவம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய இரதோற்சவம் எதிர்வரும 13ஆம் திகதி நண்பகல் 12மணிக்கு இடம்பெறும்.

காலை 10மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து இரதோற்சவம் இடம்பெறும்.

அன்றைய தினம் அடியார்கள் வருகை தருவதற்கேற்ப சகல இடங்களிலும் போக்குவரத்துச் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. (ம-185)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.9

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி.ச.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றும் விஞ்ஞான மற்றும் கணிதப் பிரிவு மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளைமறுதினம காலை 9மணி முதல் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மண்டபததில் இடம்பெறவுள்ளது.

கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ள இக் கருத்தரங்கில் பரீட்சையின் புள்ளியிடல் பணிக்குத் தலைமை தாங்கும் அலுவல்களாகப் பணிபுரியவுள்ள யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளாகள் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

விரிவுரையாளர்களின் விவரம் வருமாறு:-

இணைந்த கணிதம் - யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளி விவரவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.சற்குணராசா, பௌதிகவியல் - பௌதிகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி சி.சிவராசா, கலாநிதி ந.சீவயோகன் -

இரசாயனவியல் - சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி இ.ஸ்ரீதரன், ந.குகநாதன், உயிரியல் - விலங்கியற்றுறை விரிவுரையாளர்களான சி.நோபிள் சுரேந்திரன், இ.கபிலன். (ம-5)

## மலேரியா நோய்த் தடுப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.9

பளை பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மலேரியா நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக பிரதேசத்தில் உள்ள சுமார் 285 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-10-36)

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

செம்பியன்பற்று அ.த.க. பாடசாலைக்கு பாடசாலையின் பழைய மாணவரான அமரர் து.மதனராஜ் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-10-36)

## மானிப்பாய் இந்து அதிபர் இடமாற்றம்

மானிப்பாய்,ஏப்.5

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 1998ஆம் ஆண்டு முதல் அதிபராகக் கடமையாற்றி வந்த கு.சண்முகநாதன் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் உப அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன இந்த இடமாற்றத்தை வழங்கியுள்ளார்.

இதேவேளை - மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பதில் அதிபராக கே.ஜெகநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (எ-90)

---

ஊர்காவற்றுறை பிரதேச சபை

## அறிவித்தல்

ஊர்காவற்றுறை பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதியில் இலக்கம் 1 தொடக்கம் 6வரையான வியாபார நிலையங்களை 1996ஆம் ஆண்டுக்கு முன்பு வாடகைக்குப் பெற்றவர்களை உரிய ஆவணங்களுடன் 20.04.2004ஆம் திகதிக்கு முன்னர் ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்திற்கு நேரில் சமுகந்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கு.கணேசலிங்கம்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
08.04.2004.

(சி-34287) (26-21-18-14)

---

ஊர்காவற்றுறை பிரதேச சபை

**காரைநகர் தெற்கு சுப்பிரமணியம் வீதி திருத்த வேலைக்கான**

## கேள்வி அறிவித்தல்

**மேற்படி வேலைக்குரிய கேள்விப் பத்திரங்கள் 26.04.2004ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட இருக்கின்றன.**

01. கேள்விப் பத்திரங்களை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் 'M9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களோ அல்லது பொது ஸ்தாபனங்களோ 23.04.2004ஆம் திகதி நண்பகல் 12.00மணிக்கு முன்னர் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா 3700.00ஐயும் மீளளிக்கபபடாத கேள்விப்பத்திரப் பணம் ரூபா 460.00 (வற்வரி உட்பட) ஐயும் செலுத்தி ஊர்காவற்றுறை பிரதேச தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
03. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் *'சுப்பிரமணியம் வீதி திருத்த வேலைக்கான கேள்வி'* எனக் குறிப்பிட்டு, அரக்கு முத்திரை வைத்து, *'செயலாளர், ஊர்காவற்றுறை, பிரதேச சபை, ஊர்காவற்றுறைக்கு* பதிவுத் தபால் மூலமாக அனுப்பி அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு சேர்ப்பித்து இரண்டாவது பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம* அவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. கேள்விகள் 26.04.2004ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு உரிமையுண்டு.
06. மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

கு.கணேசலிங்கம்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
08.04.2004

(சி-34286) (26-11-14)

---

## புதிய ஸ்ரார் ரெயிலரிங்

சாவகச்சேரி, தனங்களப்பு வீதியில் இயங்கிவந்த புதிய ஸ்ரார் ரெயிலரிங் நிறுவனம் 10-04-2004 தொடக்கம் சாவகச்சேரி சங்கத்தானை ரியோ கிறீம் ஹவுஸிற்கு முனபாக இயங்குமென வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.

(சி-34294)(21-14-18) - கரன்.

---

## வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்ற தமிழ்மொழி மூல குடும்ப நல உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான ஆட்சேர்ப்பு - 2004

மேற்படி ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் விவாகமாகாத, வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இலங்கைப் பெண் பிரஜைகளிடமிருந்து *செயலாளர், சுதேச வைத்தியத்துறை அமைச்சு,* வடக்கு - *கிழக்கு மாகாணம், திருகோணமலை* மூலம் கோரப்பட்டுள்ளது.

**(02) கல்வித் தகைமை:**

க.பொ.த. (சாதாரணம்) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தமிழ் அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் இன்னுமொரு பாடத்திற்குத் திறமைச் சித்தி பெற்றிருத்தலுடன் ஒரே தடைவையில் ஐந்து (05) பாடங்களுக்குக் குறையாதவாறு இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு குறைந்தபட்சம் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**(03) ஏனைய தகைமைகள்:**

(1) 25.04.2004 ஆம் திகதியன்று பதினெட்டு வயதிற்குக் குறையாமலும் நாற்பது வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(2) உயரம் 04 அடி 10 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல்.
(3) விவாகமாகாதவராக இருத்தல்.
(4) வடக்கு - கிழக்கு மாகாண எப்பாகத்திலும் சேவையாறறக் கூடிய உடல்நலம் இருத்தல்.

மேலதிக விவரங்களையும், மாதிரிப் படிவத்தினையும் யாழ்ப்பாணம், 572/3, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் பணிமனையிலும், அண்மையிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் பார்வையிடலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை "செயலாளர், **சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வ.கி.மாகாணம், நீதிமன்ற வீதி, திருகோணமலை"** என்ற முகவரிக்கு 25.04.2004 அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலம அனுப்புதல்வேண்டும்.

இப்பதவிக்கு இவ்வமைச்சினால் ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரி விண்ணப்பித்தவர்களும் இவ்விளம்பரத்திற்கமை வாகத் தங்களது விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

**வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்,**
பதில் மாகாண பிரதிப்பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(34-21-14-18) (C/34291)

---

## நெஞ்சத்தை நெருடும் நீங்காத நினைவலைகள்

22ஆம் ஆண்டு | 13ஆம் ஆண்டு | 6ஆம் ஆண்டு



அமரர்
**பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை**
(நடுவில்)
(சட்டத்தரணியும், சமாதான நீதிவானும், பிரசித்த நொத்தாரிசும்)

தோற்றம்: 15.09.1912
மறைவு: 14.03.1982
திதி: 09.04.2004



திருமதி
**சறோஜினி ஞானபண்டிதன்**
(சறோ)
(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

தோற்றம்: 10.02.1956
மறைவு: 28.02.1991
திதி: 03.04.2004



திருமதி
**மரகதவல்லி கணபதிப்பிள்ளை**

தோற்றம்: 12.09.1925
மறைவு: 05.02.1998

எமது குடும்பத்தின் ஒளிவிளக்குகளாய்த் திகழ்ந்து எமக்கு நல்வழிகாட்டிய அன்புத் தெய்வங்களை இன்று நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம். உடல் மறைந்து போனாலும் உள்ளங்களில் என்றும் உறைந்திருந்து ஒளிவீசிக் கொண்டேயிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்களை நினைவு கூரும்:
**குடும்பத்தினர்.**

*இல.32,3/4 றோகினி றோட், கொழும்பு - 6.*

*கரணவாய் வடக்கு, உடுப்பிட்டி.*

(21-14-18) (30565)

# UNIVAC

**College of Computer Information Technology**
**Affiliated to Bangalore University.**

**ஆரம்ப விழா அழைப்பு**

இலங்கையில் பெங்களூர் பல்கலைக்கழகத்தின் கல்லூரியாக யுனிவெக் தகவல் தொழில் நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்படுகின்றது. பெங்களூர் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளுடன், பெங்களூரில் உள்ள Micro Soft, Tally, Oracle, NICT, IIHT, NIIT ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து Hardware, Software, Networking ஆகிய கணனிப் பயற்சி நெறிகளை இந்திய விரிவுரையாளர்களால் வழங்குகின்றோம்.

ஆரம்ப விழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**திகதி: 10.04.2004, நேரம்: 10.00 a.m.**

NO. 987/4 (Old 527), Milkwhite, K.K.S. Road, Jaffna, (30669)(38-12-18)

Director Univac, B.Sureshkumar (MCSE) Bangalore University.



கைதடி, நாவற்குழி தெற்கு

**பெரும்படை அம்மன் ஆலயப் பொங்கல் பெருவிழா**

அன்புடையீர் நிகழும் பங்குனித்திங்கள் இன்று (09.04.2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் காவடியும், மாலை 6 மணிக்கு விசேட பூஜையும், நாளை சனிக்கிழமை அதிகாலை 4மணிக்கு பொங்கலும், 5 மணிக்குப் பூஜையும் இடம்பெறும் என்பதனை அம்பிகை அடியார்களுக்கு அறியத்தருவதோடு, அடியவர்கள் அம்பிகையின் அருள்பெறவேண்டும் என்று அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.

**இரவு நிகழ்ச்சிகள்:**

1) ஸ்ரீ கதிர்காமக் குழுவினரின் பஜனையும்
2) சாரங்கா இசைக்குழுவினர் வழங்கும் இன்னிசை கானங்களும்.

(30661)(34-12-18) - ஆலயபரிபாலன சபையினர்.





அரியாலை - பிரப்பங்குளம்

மகாமாரி அம்மன் ஆலயம்

சகஸ்ர (1009) சங்காபிஷேக

# மணவாளக்கோல விஞ்ஞாபனம்

09.04.2004

அம்பிகை அடியார்களே!

சுவஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபானு வருடம் பங்குனித் திங்கள் 27 ஆம் நாள் (09.04.2004) வெள்ளிக்கிழமை பங்குனி அனுஷ நட்சத்திரத்தில் நவோத்தர சகஸ்ர மகா சங்காபிஷேகமும் (1009) மணவாளக்கோலத் திருவிழாவும் நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது.

காலை 8.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பித்து
பகல் 10.45 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகமும்
நண்பகல் 12.00 மணிக்கு பூசையும் தீபாராதனையும் நடைபெறும்.
மாலை 5.00 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று,
அம்பாள் பூந்தண்டிகையில் வீதியுலா வருதல் இடம்பெறும்.

விசேட மேளக்கச்சேரி
திரு.எஸ்.செல்வகுமார் குழுவினர், கல்வியங்காடு.

அடியார்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு அம்பாளின் பேரருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு: அபிஷேகத்திற்கென பால், இளநீர், வழங்கவிரும்பும் அடியார்கள் அவற்றை நேரத்துடன் ஆலயத்தில் ஒப்படைக்கும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

அரியாலை. (30651)(37-12-18) - உபயகாரர்கள்.



எதிர்காலத்தில் ஊடகத்துறையில் மிளிர விரும்பும்

## சிறுவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தால் நிர்வகிக்கப்படும் "சிறுவர் ஊடகத்துறைக் குழு" இல் புதிய உறுப்பினர்களாகச் சேர விரும்பும் 18 வயதிற்கு உட்பட்ட, ஊடகத்துறையில் (சஞ்சிகை, இலத்திரனியல் ஊடகம்) ஆர்வமான சிறுவர்களை எதிர்வரும் சனிக்கிழமை 10.04.2004 (நாளை) காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம், நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற இருக்கும் பொதுக் கூட்டத்தில் தங்களை இணைத்துக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்

**குறிப்பு:** புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட இருப்பதால் சகல உறுப்பினர்களையும் (முன்பு பதிவு செய்யப்பட்ட) தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணைப்பாளர்,
சிறுவர் ஊடகத்துறைக் குழு,
23, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (30652) (37-12-18)



## இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளை முன்னிட்டு மாபெரும் சிலுவைப் பாதை யாத்திரை

இன்று (09.04.2004) காலை 10.00 மணிக்கு "தமிழ் மிஷன் சபை" மாம்பழம் சந்தி, அரியாலையில் இருந்து நல்லூர் பாதை வழியாக யாழ்.நகரை நோக்கிச் சென்று மீண்டும் A-9 பாதை வழியாக மாம்பழம் சந்தி, அரியாலை தமிழ் மிஷன் சபையை நோக்கி வருவோம் என்பதையும், மரித்த கிறிஸ்து-இன்று உயிரோடு எழுந்து எம்மோடு இருக்கிறார் என்று உலகத்துக்குத் தெரியப்படுத்த ஆவிக்குரிய கிறிஸ்தவ ஜனங்கள் முன்வரும்படியாக அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ். தமிழ் மிஷன் சபை. (30653)(37-12-18) போதகர் டானியல்.



பிரத்தியேக வகுப்புகள்

**புவியியல்**
**A/L 2006**
**G.A.Q., B.A. (Ext.)**

ஆரம்பம்:
10-04-2004 (sat.)
காலை 8.30 (ப.நே.) மணி

BY : N.S.சங்கர்
B.A (Hons) Geog.

இடம்: சிவன் கோவில் முன் மயிலணி, சுன்னாகம்.
(மாணவர் வசதிக்கேற்ப நேர அட்டவணை ஒழுங்கு செய்யப்படும்)
(30654)



இன்டர்நெட் பிரியர்களுக்கான




மற்றும்
அனைத்துத் தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**S.M.S**
**CARD SALES CENTRE**

ஆஸ்பத்திரி வீதி,
பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.
(C/34342)(37-12-18)



# ஓராண்டு நிறைவு விழா

யாழ்ரன் மல்ரி சென்ரர் ஸ்தாபனத்தார் தமது நிறுவனத்தின் ஓராண்டுப்பூர்த்தியை இன்று (09.04.2004) வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.

இதே தினத்தில் யாழ்.சேவையூடாக நேரடி வாழ்த்து நிகழ்ச்சியும் காலை 10 -11 மணிக்கு எமது ஸ்தாபனத்தில் இருந்து இடம் பெறவிருப்பதால் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், யாவரையும் கலந்துசிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

## யாழ்ரன் மல்ரி சென்ரர்

**இல.48, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

ரீ.வி., டெக், ரேடியோ, பிலிம்றோல், கெசற் வகைகள், சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், அன்ரனா வகைகள், அன்பளிப்புப் பொருள்கள் விற்பனையாளர்.
(C/34000)(34-12-18)



# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்




நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், தன்னாட்சி உரிமை என்பவற்றை வலியுறுத்தி நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழு ஆதரவையும் வழங்கி, கூட்டமைப்பின் கொள்கைகளை அங்கீகரித்து ஆணை வழங்கி, வாக்களித்த அனைத்து தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இந்தத் தேர்தலில் போட்டியிட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய எனது விருப்புவாக்கு இல.5 இற்கு பெருமளவிலான விருப்பு வாக்குகளை வழங்கி எனக்கு பெருவெற்றியைத் தேடித்தந்த யாழ். மாவட்டத்தின் அனைத்துத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கிளிநொச்சி மாவட்ட வாக்காளப் பெருமக்களுக்கும், தபாலமூல வாக்களிப்பில் எனக்கு கூடுதலான வாக்குகளை வழங்கி பேராதரவு தந்து வாக்களித்த யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கும் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்கள் பொது அமைப்புக்கள், பத்திரிகைகள், எனது வெற்றிக்காக அயராது உழைத்த நண்பர்கள், ஆதரவாளர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம்நிறைந்த நன்றிகள்

அன்புடன் :
தமிழ்த் தேசியத்தின் வழியில் என்றும் உங்கள் சேவையில்
**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**
(C/34338) (34-12-18)



# நெஞ்சைவிட்டகலாத இதய அஞ்சலி

**24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
1914 - 06 - 23


அமரர் நமசிவாயம் தம்பு
(உத்தரவுபெற்ற நிலஅளவையாளர்)

எம் இனிய பாசமிகு ஐயாவே!
நீங்கள் எமைப் பிரிந்து ஆண்டுகள்
பல ஆனாலும் ஆறாது எம் துன்பம்
மறையாது உங்கள் நினைவலைகள்

த.இரவீந்திரராஜா
"அம்பி கோட்டம்", டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



மறைவு
2004 - 03 - 08

அமரர் தம்பு தங்கம்மா

பெற்று வளர்த்தெம்மை ஆளாக்கி
வாழ்வுயர நாம் வாழ்வு பெற்ற மலர்களில் இருந்தே
வழிகாட்டிய அந்நாள்கள்
மனத்தகத்தே வைத்து நிதம் வழி நீளா நினைப்பதுவே
பெற்ற கடன் தீர்க்க வழியாய்த் தெரியுதம்மா!

தங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல்பருமன், உடல் மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய் பிரச்சினை [illegible], வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு [illegible] நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித [illegible] விளைவுகளு மின்றி பரிபூரணமாக, குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக்குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :
Dr.R.K.நவநீதன DYNS.SMP.NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
பெருமாள் கோவிலடி வீதி,
யாழ். பயணியர் விடுதி
(வெலிங்ரன் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.

யோகாசனப் பயிற்சி வகுப்புகளுக்கு பதிவுகள் நடைபெறுகின்றன.

(30659)

முகாம் நடைபெறும் நாள்கள்:
09.04.2004 முதல் 13.04.2004 வரை.

## Organ

அடிப்படை இசைக்கும் பயிற்சியும் புதிய பாடல்களின் இசைக் குறிப்பும்.

"தூரிகை வெளியீடு"

இப்பொழுது விற்பனையாகின்றது.
விலை: - ரூ 50/-
கிடைக்குமிடம்:
தூரிகை நெல்லியடி.
மொடேண் ஸ்ரோர்ஸ் நெல்லியடி.
S.K.புத்தகசாலை, அச்சுவேலி.
சசி ரேகா கல்வியங்காடு.

★ மேற்படி புத்தகம் தேவைப் படும் விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க.

T.P.: 226 3907 (C/34345)(38)

கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை

**இலவசம்**

ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு
யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(30331)(38)

## நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக்,
தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடிக்க
A.R.ரஹ்மானின் இசையில்....



காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (ப.ப.)
(34180)(12)

## ராஜா யாழ்ப்பாணம்



லிட்டில் சுப்பர் ஸ்டார் நடித்த
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (ப.ப.)

## நிறைஞ்சனாஸ்



விஜய், ரிச்சா பட்டேல்.
விவேக், கிருஸ்ணா
மற்றும் பலர் நடித்த
ஷாஜகான்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (ப.ப.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
MAID IN MANHATTAN

## கௌரவிப்பும் பாராட்டும்

கரவெட்டி கிழக்கு, கிழவித்தோட்டம் ஸ்ரீ விக்ன விநாயகர் தேவஸ்தான நவகுண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேகக் கிரியைகளைச் சிறப்புற நடத்திய (04.04.2004) அத்தியடிப் பிள்ளையார் ஆலய பிரதம குருவான

சிவாச்சார்ய குருமணி

**சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்கள்** அவர்களுக்கு

**"வேதாக மோத்தம ஆச்சாரிய சாரதா"**

எனும் கௌரவ விருதினையும்

ஆலய நித்திய பூசகர்

**பிரம்மஸ்ரீ யோ.கேதீஸ்வரசர்மா** அவர்களுக்கு

**"கணபதி பூஜா துரந்தரநிதி"**

எனும் கௌரவ விருதினையும் ஆலய பரிபாலன சபையினரும் ஊர் மக்களும் பாராட்டி வழங்கிக் கௌரவித்து ஆசிபெற்றுக்கொண்டனர்.

(30672)(38-13-16-30) ஆலய பரிபாலனசபையினர்.

## நியூட்டன் DEGREE HALL

ஆரியகுளம் சந்தி, யாழ்நகர்

**A/L 2006**
கலை, வர்த்தகப் பிரிவுகள்
10.04.04 சனி காலை 9 மணி

| | | | |
|---|---|---|---|
| Tamil: | N.S. அமரசிவம். | Log.: | P.கமல் |
| H.C: | க.சத்தியதாசன் | Dra.: | I.சத்தியா. |
| Geo: | K. கிரிதரன் | Pol.Sc.: | பொன் சந்துரு |
| I.Q: | T.திருமுருகன் | Eco.: | P.சண் |
| Acc: | N.சதீஸ் | Com.: | K.சாந்திநாதன். |

(30671)(38-13-16-30)

G.A.Q., B.A., 1st in Com. யாழ்., பேராதனை
விரிவுரைகள் ஆரம்பம்: 10.04.04. சனிக்கிழமை காலை 9 மணி

## நீங்காத நினைவலைகள்

ஏழாம் ஆண்டில் — பதினாறாம் ஆண்டில்



| | தோற்றம் | |
|---|---|---|
| 08-03-1942 | | 09-07-1943 |

| | மறைவு | |
|---|---|---|
| 09-04-1997 | | 14-05-1908 |



அமரர் **வைரமுத்து சதாசிவம்** — திருமதி **இரத்தினாவதி சதாசிவம்** (மாங்கனி)

பூவுலகில் புகழுடன் எமை வாழ வைத்தீர்கள் - இன்று
எம் வாழ்வின் பெருமைகளை அறிய நீங்களில்லை - எனினும்
ஏழல்ல பதினாறல்ல எத்தனை ஆண்டுகள்தான் சென்றிடினும்
உங்கள் நினைவுகளுடன் நாங்கள் உயர்ந்திடுவோம்.

கலாவாணி ச.ச.நிலைய வீதி,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**பிள்ளைகள்.**

(30663)(30-13-16)

# இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்





365 நாள் சேவை

தொ.பே: 011 2372333

இப்புதுவருடத்தில்
உங்களின் அன்புக்குரியவர்களிடமிருந்து
**WESTERN UNION MONEY TRANSFER**
ஊடாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

எங்கள் முகவர்கள் வடகிழக்கில்:

யாழ் நகரில்
குமார் ஏஜன்ட்
மகாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்
ராஜீ ஸ்டோர்ஸ்
கணேஷா ஜுவல் ஹவுஸ்
ஸ்ரீ முருகன்
அட்லஸ் இன்டர்
குகான் கமியுனிகேஸன்

திருநெல்வேலி
திருமுருகன் கொம்நெட்
யோகா கமியுனிகேஸன்

பருத்தித்துறை
கணேஷா ஏஜன்சி

காரைநகர்
ஸ்ரீ முருகன்

மானிப்பாய்
தினேஷ் பேக் ஹவுஸ்

நெல்லியடி
அம்பிகா கமியுனிகேஸன்

சுன்னாகம்
நீதினி முகவர் தபால் நிலையம்

கொடிகாமம்
அட்லஸ் இன்டர்

நெடுந்தீவு
வசந்தா முகவர் தபால் நிலையம்

பொலிகண்டி
ஓம் சரவணபவ கமியுனிகேஸன்

கோப்பாய்
எபணி முகவர் தபால் நிலையம்

இணுவில்
கணேசன் சென்டர்

சாவகச்சேரி
V.M.K. ஜுவலர்ஸ்

நல்லூர்
சந்தியா மண்டிகோட்யாட்

கொக்குவில்
ஞானம்ஸ் முகவர் தபால் நிலையம்

திருகோணமலை
லேசர் ஸ்டேசனர்ஸ்

மட்டக்களப்பு
சுல்வரி முகவர் தபால் நிலையம்
ஸ்ரீதரன் கமியுனிகேசன்
ரிவேரா என்டர்ப்ரைசர்ஸ்

காத்தான்குடி
அமானா வங்கி

கல்முனை
அமானா வங்கி

வாழைச்சேனை
TLT இம்பெக்ஸ்

அக்கரைப்பற்று
அடெம்ஸ் முகவர் தபால் நிலையம்

பொத்துவில்
N.M. ட்ரேடர்ஸ்

வவுனியா
கணேசா ஏஜன்சி
அம்பாள் ஏஜன்சி

மன்னார்
முஞ்சுளா ஸ்டோர்ஸ்

WESTERN UNION MONEY TRANSFER

AUTHORISED AGENT
MMBL Money Transfer (Pvt) LTD
300,GALLE ROAD,COLOMBO-03

## ஹக்கீம் - ரணில் சந்திப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றார். பொதுத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் இரு தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற இரண்டாவது சந்திப்பு இதுவாகும். இந்தச் சந்திப்பில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நியமனங்கள குறித்து கலந்துரையாடப்பட்டதாக ரவூப் ஹக்கீமின் ஊடக இணைப்பாளர் டாக்டர் ஹாமீஸ் தெரிவித்துள்ளார். (ஐ-9-ரி)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்த இருந்தனர். கூட்டமைப்பின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து கலந்துரையாட ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. எனினும் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் சிலர் இன்று கிளிநொச்சிக்கு வந்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழச்செல்வனுடன் கலந்துரையாடவிருக்கின்றனர். (ஐ-3)

## சுதந்திர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மேரி லூசிற்றா.

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க உட்பட 3 பேருக்கு தேசியப் பட்டியல் மூலம் எம்.பி. பதவிகள் வழங்கப்படவுள்ளன. அதற்காக தற்போது தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள மூவர் எதிர்வரும் 22 ஆம் திகதி தமது பதவிகளை இராஜினாமா செய்வார்கள் என கட்சியின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ஐ)

## சங்கரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலைமை காரணமாக ஆனந்த சங்கரியின் கொள்கைகளும், அபிலாசைகளும் ஏதுவாக இருப்பினும் அவருக்கு ஜனநாயக ரீதியாக குரல் எழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது எமது கடமையாக இருக்கின்றது.

அதற்காக அவருக்கு தேசியப்பட்டியல் அங்கத்துவத்துக்காக அழைப்பு விடுக்கலாம் என்ற நிலைப்பாட்டில் நாம் கலந்துரையாடி வருகின்றோம் - என்று ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

ஜாதிக ஹெல உறுமயகட்சிக்கு கிடைக்கும் நாடாளுமன்ற ஆசனங்களுக்கு பௌத்த பிக்குகளைத்தவிர எந்தவொரு சாதாரண பிரஜையும் நியமிக்கப்படமாட்டார்கள் என்று அந்தக் கட்சி தேர்தலுக்கு முன்னர் உறுதிமொழி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது:- சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுக்கள் வெற்றியளிக்க வேண்டும். இந்த வகையில் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகான சர்வதேசத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுக்கள் தோல்வியில் முடியக்கூடாது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் கடந்தகாலச் செயற்பாடுகளில் எமக்கு ஐயுறவு உள்ளது. அந்தச் செயற்பாடுகளைவைத்து முடிவுகளை எடுக்காமல் புதிய வழியில் மாறிவருவார்களானால் அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

நிலையான அரசு ஒன்று அமைத்த பின்னர் இது பற்றி முடிவு செய்யலாம். தெற்கின் நிலையை நாம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறோம்

- இவ்வாறு அவர்கூறியுள்ளார்.(ஐ-3)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாசைகளைப் பிரதிபலிக்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகள் கஷ்ட நஷ்டங்களுக்குத் தீர்வுகாண வேண்டும்" என்று கருணா தனது செவ்வியில் தெரிவித்துள்ளார் என்று "ஐலண்ட்" ஆங்கிலப் பத்திரிகை தனது நேற்றைய இதழில் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஹெல உறுமய கட்சியைப் பொறுத்தவரையில் அந்தக் கட்சியின் ஆதரவு தனக்குக் கிடைக்காதா என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அங்கலாய்த்துக் கொண்டு இருக்கிறது. சிறுபான்மை அரசாங்கத்தை அமைக்கும் சுதந்திரக் கூட்டணி நாடாளுமன்றத்தில் தனக்குப் பெரும்பான்மை உண்டு என்று காட்டுவதற்குக் ஹெல உறுமயவின் ஆதரவு பெரும் உதவியாக இருக்கும். இந்த நிலையில் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நடத்த இருக்கும் உத்தேச சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக எச்சரிக்கை விடுக்கும் பாணியில் கருத்துத் தெரிவித்திருக்கிறது ஹெல உறுமய.

இனப்பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எந்த நோக்கத்தில் பேச்சு நடத்த ஜனாதிபதி முற்படுகிறார் என்பது குறித்து நன்கு ஆராய வேண்டியிருக்கிறது.

இனப்பிரச்சினை தீர்வுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேச்சுக்களை நடத்தக் கூடாது. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அமைப்புக்களுடனும் வட்டமேசை மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும் எனவும் ஹெல உறுமய கூறியிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் எவ்வகையிலாவது உடன்படிக்கை செய்துகொள்ளும் நோக்கில் ஜனாதிபதி பேச்சு நடத்த முற்பட்டால் அதனைத் தாம் முற்றாக எதிர்ப்பதாகவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. (ஐ-9-7)

## துப்பாக்கிச் சூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறந்தவரின் தலையிலும் நெஞ்சுப் பகுதியிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. நீல நிற சாரம் மற்றும் ரீசேட் ஆகியவற்றை இறந்தவர் அணிந்திருக்கிறார் எனவும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

புதன்கிழமை இரவு எட்டு மணியளவில் இந்த இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும், வெளி மாவட்டமொன்றைச் சேர்ந்தவராக இவர் இருக்கலாம் என்றும் வாழைச்சேனைப் பொலீஸார் நம்புகின்றனர்.

சடலத்துக்கு அருகில் சிவப்பு நிறத்திலான பிரசுரம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ரஞ்சன் படை எனும் பெயரில் வெளியிடப்பட்டுள்ள இப்பிரசுரத்தில் தென் தமிழீழத் தலைமைத்துவத்துக்கு எதிராக உளவு நடவடிக்கையில் இவர் ஈடுபட்டார் என்றும் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட ராஜன் சத்தியமூர்த்தியின் கொலைக்கு இவர் காரணமானவர் என்றும் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9-7)

## ஜனாதிபதிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா - இலங்கை இடையிலான உறவுகள் மேலும் வலுவடைய வேண்டும் என்று கூறியுள்ளார்.

ராஜபக்ஷவுக்கு அனுப்பிய செய்தியில் பிரதமராக பதவி ஏற்றுள்ள தங்களை வாழ்த்துகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ-க)

## வைகோ உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கிலிருந்து உடனடியாக விடுவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் - என்று இந்த ஆய்வுக்குழு தமிழக தலைமைச் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

'பொடா' வழக்கு அரசமைப்புப்படி செல்லும் என்று உச்ச நீதிமன்றம் முன்னர் அளித்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டவற்றை 'பொடா' மறு ஆய்வுக்குழு தற்போது சுட்டிக்காட்டியுள்ளது.

"வெறும் வாய்மொழி ஆதரவு மட்டும் 'பொடா' வழக்கில் குற்றமாகாது. ஒருவர் தீவிரவாதச் செயலிலோ அலலது வன்முறைச் செயலிலோ ஈடுபட்டிருந்தால் மட்டுமே 'பொடா' வழக்கை அவர் மீது தொடர முடியும். மேலும் குறிப்பிட்ட நபரின் மனநிலை எவ்வாறானது என்பதும் முக்கியமான அம்சமாகும்" என்று உச்ச நீதிமன்றம் அளித்திருந்த தீர்ப்பை 'பொடா' மறு ஆய்வுக்குழு மேற்கோள் காட்டியுள்ளது.

வைகோவோ மற்றும் எட்டு நபர்களோ தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிரவாதச் செயலையோ வன்முறைச் செயலையோ தூண்டும் நோக்கத்துடன் ஈடுபடவில்லை. எனவே உச்ச நீதிமன்றத்தின் தீர்புக்கு அமைய இவர்கள் வாய்மொழி ஆதரவு தெரிவித்துள்ளார்கள் என்பது குற்றமாகாது. எனவே இவர்கள் மீதான இந்த வழக்குத் தொடர்ந்து இடம் பெறுவதற்கு காரணம் எதுவுமில்லை. இப்படி "பொடா"மறு ஆய்வுக்குழு தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தீர்புக்கு அமைய வைகோ உள்ளிட்ட ஒன்பது பேரும் நீதிமன்றினால் வழக்கிலிருந்து விடுவிக்கப்படுவர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இந்தியாவில் "பொடா" சட்டத்தின் கீழ் விடுதலைப புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை 'பொடா'மறு ஆய்வுக் குழுவின் தலைவர் நீதிபதி சகாரியா தலைமையிலான குழு தொடர்ந்தும் மீள் பரிசீலனை செய்து வருகிறது.

இந்தியாவில் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் இந்திய அரசிடம் செய்திருந்த மனுத்தாக்கலின் அடிப்படையில் இந்த மீள்பரிசீலனை இடம்பெற்று வருவதுகுறிப்பிடத்தக்கது. (ஐ-7-9-ரி)


பெண் வேலையாள்கள் தேவை
கையடக்கத் தொலைபேசி விற்பனை செய்யும் நிறுவனத்திற்குப் பின்வரும் பதவிகளுக்கு பெண் பிள்ளைகள் தேவை.
- விற்பனையாளர்
- காசாளர்
- போட்டோ பிரதி இயந்திர இயக்குநர்.
முழு விவரங்களுடன் நேரில் வருகை தரவும்.
யாழ் போன் சொப்.
இல.11, நவீனசந்தை, மேல்மாடி
[ஆஸ்பத்திரி வீதி]
யாழ்ப்பாணம்.
(C/34288)(40)

LOGIC
A/L 2006
பிரிவு- I Sat.,Sun.- 8 a.m.
பிரிவு- II Tue. 4.p.m.
By.P. கமல்
BRIGHTMAN
நாவலர் வீதி.
(30673)(38)

கணக்கீடு
A/L 2005
ஒப்படைக்கணக்கு
S.தவா B.Com(Hons)(AccSpl)
ஆரம்பம்: நாளை 8.30 a.m. (ப.நே.)
'விடுமுறைகால நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்'
NEW SCIENCE COLLEGE
JAFFNA. (30670)(30)

மொடேன்
கல்வி நிலையம். நெல்லியடி.
O/L DAY CLASS
தமிழ்: இராஜதுரை, சொரூபன்
கணிதம்: இராமகிருஷ்ணா, சந்திரன் (உடுப்பிட்டி)
விஞ்ஞானம்: திரவியனாதன், நிறைஞ்சன் (உடுப்பிட்டி)
சமயம்: பிரபல ஆசிரியர்
சமூகம்: பவதாரன்
ஆங்கிலம்: பரராஜசிங்கம்
சுகாதாரம்: பானு
ஆரம்பம்: 10-04-2004 (சனி)
காலை 8.00 (ப.நே.)
(30564)(30)

பொருளியலில் விசேட சித்திக்கு என்றுமே..........
பொருளியல்
திரு. உதயன்
A/L 2006
3 பிரிவுகள் சனி, ஞாயிறு.
பிரிவு I - 11.30 - 12.30
பிரிவு II - 08.30 - 09.30
பிரிவு III - 09.30 - 10.30
ஆரம்ப அலகிலிருந்து ஆரம்பம்.
விக்னா கல்வி நிறுவனம்.
(30649)(30)

கணக்கீடு A/L - 2006
ஆசிரியர் திரு. வின்சன்
B.B.A. MR. M. SPL.
ஆரம்பம்: 10.04.2004
(சனி - 9.30 a.m.)
வினைல்ஸ்
K.K.S. Rd. சுன்னாகம்.
(30634)(30)

2004 இல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும்
கணித. விஞ்ஞான மாணவர்களுக்கான
வழிகாட்டல் கருத்தரங்கு
இடம்:- யா/விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி.
காலம் - 11.04.2004
மு.ப. - 9.00 மணி
உயர்தரப் பரீட்சையின் புள்ளியிடல் பணிக்கு தலைமை வழங்கும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆலோசனை வழங்குவார்கள்.
இணைந்த கணிதம்
கலாநிதி சி.சிறிசற்குணராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்
கணித - புள்ளிவிவரவியல்துறை
பௌதிகவியல்
கலாநிதி சி.சிவராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்
பௌதிகவியல்துறை
இரசாயனவியல்
கலாநிதி இ.சிறிகரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இரசாயனவியல்துறை
உயிரியல்
திரு.சி.நோபிள் சுரேந்திரன்
விரிவுரையாளர்
விலங்கியல்துறை
கலாநிதி ந.சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
பௌதிகவியல்துறை
திரு.ந.குகநாதன்
விரிவுரையாளர்
இரசாயனவியல்துறை
திரு.இ.கபிலன்
விரிவுரையாளர்
தாவரவியல்துறை
(30572)(37)
ஏற்பாட்டாளர் ஸ்போர்ஸ் விளையாட்டுக்கழகம்

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்.
A/L 2005
"Heat"
By:- ஜெயசீலன்
ஆரம்பம்: 17.04.2004
சனி 10 a.m.
"FIELDS"
ஆரம்பம் 10.04.2004
சனி 7 a.m.
By:- பிரபா
(30566)(40)

Dip. in Hardware
Period- 72 Hours
Time 09.30 - 16.30
10/04/2004 லிருந்து 26/04/2004 வரை
மிகக் குறுகியகால, மிகப் பயன்மிக்க, யாழ் நகரில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்படும் இப் பாடநெறியில் இணைந்து பயன்பெறுவதற்காக உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்
பதிவுகளிற்கு
STP
73. Palaly Road, Kantharmadam.
T.P:021-222-2674


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கணேசலிங்கம்

தம்பசிட்டி, பண்டாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் கணேசலிங்கம் நேற்று (08.04.2004) வியாழக்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும் சக்திவடிவேல், நடேசலிங்கம், முருகவேல் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பரமேஸ்வரி, தாட்சஜினி, அனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெவேந்தனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2004) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டாரி அம்மன் கோவிலடி,
தம்பசிட்டி,
பருத்தித்துறை. (C/34367)(30-13-16)

தகவல்:
க.முருகவேல்
(மகன்).






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கிராம மக்களும் தொலைக்காட்சியை பயன்படுத்த வசதி செய்ய வேண்டும்

## அதற்காக நிர்மாண டிரேடர்ஸ் அதிபர் வகுத்துள்ள திட்டம்



ரி.என்.எல். தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பெனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித்கொத்தலாவலையும் தொழில் அதிபர் றோலண்ட் ஜான்ஸை செவ்வி காண்கிறார்கள். வங்கி அதிகாரி, மொழிபெயர்ப்பாளர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

ரி.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர நிகழ்ச்சியில் தொழிலதிபர் மல்கம் ரோலண்ட் ஜான்ஸ் கடந்த 6ஆம் திகதி தோன்றித் தனது தொழில் முன்னேற்றம் பற்றி விவரித்தார்.

கிராம மக்களும் தொலைக் காட்சியைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகக் கறுப்பு, வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகளை மலிவு விலையில் விற்பனை செய்ய வத்தளை நிர்மாண டிரேடர்ஸ் அதிபர் ரோலண்ட் ஜான்ஸ் திட்டம் வகுத்துள்ளார். ரி.என்.எல். தொலைக்காட்சயில் அறிவிப்பாளர் சமுதிக சமர விக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும நிர்வாகப் பணிப் பாளருமான தேசமான்ய லலித் கொத்த லாவலையும் ரோலண்ட் ஜான்ஸை செவ்வி கண்டனர்.

**வர்த்தக ஸ்பெஷல்**

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:* உங்களைப் பற்றி எமக்கு விளக்குவீர்களா?

*பதில்:* எனது தகப்பனார் அரச துறையில் தொழில் பார்த்தார். அவர் நீதிமன்றில் முதலியாராகக் கடமையாற்றினார். எனது தந்தையின் வழியைப் பின்பற்றி அரசதுறையில் அவரைப் போன்று என்னையும் இணைத்துக் கொள்ளப் பெரும்பாடுபட்டார். இருப்பினும், சிறுபராயத்திலிருந்தே வியாபாரத் துறையில் என்னை ஈடுபடுத்திக்கொள்வதிலேயே நாட்டம் கொண்டேன். 1984ஆம் ஆண்டில் சிறியளவில் வியாபார நடவடிக்கையைத் தொடங்கினேன்.

பொருள்களை கடைகளில் வாங்கி கமிஷன் முறையில் வியாபாரம் செய்தேன். சிறியளவில் வருமானம் கிடைத்தது. காலப்போக்கில் வெளிநாடுகளிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகள் எனப் பெரும்பாலான மின் உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புகள் கிட்டியபோதும் முதலீடு செய்வதற்கு போதியளவிலான பணம் என்னிடம் இருக்கவில்லை.

இப்படியான ஒரு சூழ்நிலையில் எனது நண்பரொருவர் 'செலான்' வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிக்குமாறு ஆலோசனை கூறினார்.

*கேள்வி:* வங்கியில் கணக்கொன்றை ஆரம்பித்தவுடனேயே கடன் பெற்று வியாபாரத்தைத் தொடர முடியும் என்ற நம்பிக்கை எப்படி வந்தது?

*பதில்:* செலான் வங்கி வியாபாரத துறையில் முன்னேறத் துடிப்பவர்கள், ஆர்வமுள்ளவர்கள் எனத் துடிப்புள்ளவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு ஊக்கமளிக்கிறது. நான் வத்தளை செலான் வங்கிக் கிளையில் கணக்கு ஆரம்பித்தேனே தவிர, இதுவரை காலமும் நான் வங்கிக்குச் சென்றதில்லை. இன்றுவரையும் நான் வங்கிக்குக் கடன் கொடுக்க வேண்டியுள்ளது. இருப்பினும், வங்கி தொடர்ந்தும் எனக்கு உதவி புரிகிறது. காரணம், நேர்மையும் நியாயமும் யாரிடம் உள்ளது என்பதை வங்கி சரியாக ஆராய்ந்து அவர்களை ஊக்குவிக்கிறது.

*கேள்வி:* நீங்கள் எந்த நாடுகளிலிருந்து மின்சார உபகரணங்களை இறக்குமதி செய்கிறீர்கள்?

*பதில்:* கூடுதலாக சிங்கப்பூர், டுபாய் போன்ற நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கிறேன்.

*கேள்வி:* இந்த நாடுகளைத் தெரிவுசெய்வதற்கான காரணம் என்ன?

*பதில்:* இந்த நாடுகளில் தரமான மின்சார உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். தரமான மின்சார உபகரணங்களை நீண்டகால உத்தரவாதம் வழங்கக்கூடிய வகையில் அந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யமுடியும். இதன் காரணமாகக் கொள்வனவு செய்பவர்களிடமிருந்தும் முறைப்பாடுகள் கிடைப்பதில்லை. எனவே, தரமான பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறேன்.

*கேள்வி:* இத்துறையில் உங்களுக்குப் பெருமளவிலான பணம் முதலீடு செய்வதற்கு தேவைப்படுமே?

*பதில்:* பெருந்தொகையான பணத்தை இத்துறையில் முதலீடு செய்துள்ளேன். இதற்கு எனக்கு தொடர்ந்தும் செலான் வங்கி உறுதுணையாக இருந்து வருகிறது. அந்த வங்கியின் முகாமையாளர் சரியாகத் திட்டமிட்டு, எனக்கு உரிய நேரத்தில் கடன்களை வழங்குவார். இன்றும் நான் செலானுக்கு கடனாளியாக இருக்கிறேன். இருந்தும் கடன் கிடைக்கும்.

*கேள்வி:* இதே மின்சார உபகரணங்கள் ஏனைய நாடுகளிலும் இருக்கின்றனதானே?

*பதில்:* இருக்கின்றன. ஆனால், லாபம் இருந்தும் உத்தரவாதம் இல்லை. ஆனால், தற்போதைய நிலையில் சீனாவிலுள்ள சில கம்பனிகள் தரமான பொருள்களை உற்பத்தி செய்கின்றன. எனவே, விரைவில் சீனாவலிருந்து மின்சார உபகரணங்களைக கொள்வனவு செய்யத்திட்டமிட்டுள்ளேன்.

*கேள்வி:* உங்களின் எதிர்காலத் திட்டம் என்ன?

*பதில்:* எனது ஒரே திட்டம் இலங்கையில் கறுப்பு, வெள்ளை தொலைக் காட்சிப் பெட்டிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றை நிறுவ வேண்டும் என்பதாகும். விரைவில் அதற்குரிய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க முடிவுசெய்துள்ளேன்.

*கேள்வி:* இது வெற்றிகரமாக அமையும் என நினைக்கிறீர்களா?

*பதில்:* நிச்சயமாக வெற்றிகரமாக அமையும். காரணம் பற்றரி மூலம் இயங்கும் கறுப்பு, வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி கிராமப் புறங்களில் - மின்சாரம் எட்டாத பகுதிகளில் - வசிக்கும் சாதாரண கிராமப்புற மக்களுக்கு மிகவும் உபயோகமானதாக இருக்கும். அதேநேரம், மிகவும் குறைந்த விலையில் சிறந்த தொழில நுட்பத்துடன் கூடிய தொலைக் காட்சிப் பெட்டிகளாக அவைகள் இருக்கும்.

சிறந்த தொழில்நுட்பம் கூடிய கறுப்பு, வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கக்கூடிய உதிரிப் பாகங்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து இங்கு வைத்து வடிவமைத்து, சந்தையில் விற்பனைக்குவிடத் தீர்மானித்துள்ளேன். இதில் பெரும்பாலானவர்கள் பயனடைவார்கள். தொழில் வாய்ப்புகள் பெரும்பாலானவர்களுக்குக் கிடைகக வாய்ப்புள்ளது.

*கேள்வி:* எமது நாட்டில் இதைத் தயாரிப்பதன் மூலம் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் உற்பத்திகளுடன் போட்டி போட முடியுமா?

*பதில்:* சீனாவிலிருந்து லாபகரமாக உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்ய முடியும். இங்கு அவற்றை வடிவமைத்து எமது முத்திரையுடன் விற்பனைக்கு விடமுடியும். ஏனைய உற்பத்தியைவிட மிகவும் குறைந்த விலையில் பாவனையாளருக்கு வழங்க முடியும். எனவே, தரமானப் பொருள்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்யும்போது ஏனைய நாடுகளின் உற்பத்திகள் எம்மைப் பாதிக்காது. எமது உற்பத்தி தரமானதாக இருந்தால ஏனைய நாடுகளின் உற்பத்திகளைக் கண்டு நாம் பின்வாங்கத் தேவையில்லை.

- இவ்வாறு ரோயல்ட் ஜான்ஸ் தெரிவித்தார்.

# கடல்வள தொழில்நுட்ப ஆசிரியருக்கு விடுமுறைக் கால விசேட வகுப்புகள்

## யாழ்.கல்வி வலயத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

நீர்வாழ் உயிர்வள தொழில் நுட்ப ஆசிரியர்களுக்கான விடுமுறை கால விசேட வகுப்பு யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

பாடசாலைகளில் கடல்வளக் கற்கைநெறியை மேற்கொண்டு இந்தப் பயிற்சிக்குப் பதிவுகளை மேற்கொண்ட ஆசிரியர்களை இந்த விசேட வகுப்பில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

உயிரியல் கல்விக் கழகம் நடத்தி வரும் இந்த விசேட வகுப்பு விடுமுறைக் காலத்தில் தொடர்ச்சியாக நடத்தப்படும் என்றும் -

இவ் வகுப்புகள் மூலம் குடாநாட்டுப் பாடசாலைகள் எதிர்காலத்தில் கடல் வள தொழில் நுட்பப் பாடத்தைப் புதிதாகக் கற்பிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் -

. கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ-6)

# சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க தென்மராட்சியில் 100 பேருக்குக் கடன்

## வீடமைப்பு அதிகார சபை வழங்குகின்றது

தென்மராட்சி,ஏப்.9

யாழ்.மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கென 100 பேருக்கு வீடமைப்புக் கடன்களை வழங்கி வருகின்றனர்.

வருமான வேறுபாடின்றி இந்த வீடமைப்புக் கடன் தலா 50ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாகவும் -

மேற்படி கடனுக்கு விண்ணப்பித்தவர்களில் 46பேருக்கு முதல் கட்டமாகத் தலா 10ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அரச உத்தியோகத்தர் ஒருவரின் பிணையுடன் வழங்கப்படும் இக்கடன் தொகையைக் கடன்பெறுவோர் தமது வசதிக்கேற்ப 5வருடங்கள் அல்லது பத்து வருடங்களில் மீளச்செலுத்த முடியுமென தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் அறிவித்தனர்.

(எ-8-117)

## சிங்கள மொழி வகுப்புகள் இடைநிறுத்தம்

யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையில் நடைபெற்று வந்த அடிப்படைச் சிங்களமொழி வகுப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த வகுப்புகள் மீண்டும் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-10-51)

# சாவகச்சேரி நகரசபையின் பொதுமைதானம் இம்மாதம் 19ஆம் திகதி முதல் பாவனைக்கு!

தென்மராட்சி,ஏப்.9

சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தைக் கழகங்களின் பயிற்சிக்குத் திறந்துவிட படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மைதானம் துப்புரவு செய்யப்பட்டு எதிர்வரும் 19ஆம் திகதி நகரசபையிடம் கையளிக்கப்பட்ட பின்னர் விளையாட்டுக் கழகங்கள் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6.30 மணி வரை மைதானத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவர் எனவும் - மைதானத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள முட்கம்பி வேலிகளும் படையினரின் காவலரண்களும் அகற்றப்படமாட்டாதெனவும் -

பயிற்சியில் ஈடுபடுவோர் தனங்கிளப்பு வீதியூடாக மைதானத்திற்குச் செல்லமுடியுமெனவும் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஐந்து வருடங்களாகப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த மைதானத்தை இரு மாதங்களுக்கு முன்னர் கையளிக்க ஏற்பாடாகிய வேளையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் கையளிப்பது இடைநிறுத்தப்பட்டது.

தேர்தல் முடிவுற்றதையடுத்து, மைதானத்தில் உள்ள பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்த பின்னர் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை அது நகரசபையிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மைதானம் மற்றும் மைதான அரங்கு ஆகியவற்றைப் புனரமைக்க பெருமளவு நிதி தேவைப்படுவதாகவும், குண்டும் குழியுமாகக் காணப்படும் மைதானத்தில் பரவுவதற்குத் தேவையான மணலைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் உள்ளதாகவும் சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரப்பகுதி விளையாட்டுக் கழகங்களுக்கு மைதான வசதி இல்லாததால் போதிய பயிற்சி பெற முடியாமல் உள்ளது குறித்து நகர அபிவிருத்திக் குழுவின் படைத்தரப்புக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-8-117)

# குருநகர் பகுதி மீனவர்களுக்கு கடனடிப்படையில் வலைகள்

## கடற்றொழிலாளர் சங்கம் ஏற்பாடு

குருநகர்,ஏப்.9

குருநகரில் உள்ள இழுவைறால் மடிச் சங்கம், குருநகர் சிறகுவலைத் தொழிலாளர் சங்கம் ஆகியவைகளுக்கு கடனடிப்படையில் வலைகளை வழங்க குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வலைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் -

வலைகளைக் கடனடிப்படையில் பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளவர்களின் பெயர், விவரங்களைத் தெரியப்படுத்துமாறும் - குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச சங்கத் தலைவர் மிக்கேல்ராசா அறிவித்துள்ளார்.

# நாட்டு நலனை மேம்படுத்த அரசுக்கு ஹெல உறுமய ஆதரவு

கொழும்பு,ஏப்.9

புதிய அரசு நாட்டின் நலனை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளும் எந்தவொரு முயற்சிகளுக்கும் நாடாளுமன்றத்தில் தமது ஆதரவு உண்டென்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

தேசத்தின் நலன்களைக் காப்பதற்காக அறிமுகப்படுத்தப்படும் எந்தவொரு சட்டத்தையும் தாம் வரவேற்பதாகக் கட்சியின் பொதுச் செயலாளர் சங்கைக்குரிய உருவே தம்மாலுக தேரர் தெரிவித்தார்.

தமது சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சலுகைகளை எதிர்பார்க்கவில்லை. தமக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை பொதுச் சேவைக்காக ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு வழங்குவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். கட்சியின் செயற்பாடுகளைத் தேசிய மட்டத்திற்கு விஸ்தரிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

(எ-8-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

156 தொடர் இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள CG125 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ.கிருஸ்ணகுமார், சிறுப்பிட்டி. T.P.: 077 6051360. (30569)

இரண்டு வயதுடைய நல்ல இன பெண் அல்சேசன் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.தேவராசா, கல்வயல், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (சி-34322)

பாவனையிலுள்ள Japan Honda cm 250 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மெக்கானிக் ரவி, ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கு. (30609)

35 நாளகளில் 2kg இற்கு மேல வளர்ச்சியடையக்கூடிய பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. தொ.பே. இலக்கம்: 3529, 2867. P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (30632)

கல்பேட் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. ஒரு கிலோ 120/-. 73, றக்கா வீதி, சுண்டுக்குளி. T.P.: 5181. (30632)

## தேவை

இளைப்பாறிய இரு வயோதிபத் தம்பதிகளுக்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் வழங்கப்படும். தொடர்பு: கந்தையா இலட்சுமணன், சித்தன்கேணி. (30611)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது, பாவம் குறைந்த ஆசிரியருக்கு பொருத்தமான, அழகிய, பண்புடைய மணமகள் தேவை. ஆசிரியை விரும்பத்தக்கது. விளம்பர இலகம் 2223, உதயன், யாழ்ப்பாணம். (30628)

## ஒப்படைத்துதவவும்

க.இராமச்சந்திரன் என்பவருடைய வலி. தெற்கு பிரதேச சபை அலுவலக றபர் சீல் மற்றும் அலுவலகப் பொருள்கள், கண்ணாடி என்பன அடங்கிய அலுவலகப் பை (01-04-2004) வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் தேர்தல் கடமையின் போது தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் க.இராமச்சந்திரன், வலி. தெற்கு, பிரதேச சபை, சுன்னாகம். T.P.: 060 221 2327 என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.(30605)

## மதகு சேதம்; கனரக வாகனப் போக்குவரத்துத் தடை

தென்மராட்சி,ஏப்.9

சரசாலை, பருத்தித்துறை வீதியில் கப்புதூப் பகுதியிலுள்ள மதகு உடைந்துள்ளதால் கனரக வாகனப் போக்குவரத்துக்கள் இவ்வீதி வழியாகச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

வீதியின் நடுப்பகுதியில் பாரிய குழி ஏற்பட்டுள்ளது. இவ்வீதியில் செல்லும் சாவகச்சேரி - பருத்தித்துறை பஸ்சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மாணவர்களும் பொதுமக்கீளும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆறு மாதங்களுக்குப் முன்னர் இவ்வீதியில் உடைந்து வீழ்ந்த மதகுக்கு 100யார் தூரத்தில் உள்ள மதகே தற்போது உடைந்ததாகும். (ம-117-131)


Personal Class

புதிய தொழிநுட்ப வளர்ச்சியில்

Video Mixing

Studio Desigining

*உங்களுக்குத் தேவையான விளம்பரங்களை வடிவமைத்திட

*Photo Editting செய்திட

தொடர்புகளுக்கு: 021-2222352

தேவை

யாழ். நகரில் பிரபல வீதியில் இயங்குகின்ற வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்துக்குப் பங்காளர் தேவை.

தொடர்பு: திரு.டானியல் 021 2223712 (30641)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## Orientation Programme
### 2001/2002 கல்வியாண்டு
### வெளிவாரி மாணவர்களுக்கான பட்டப்படிப்பு கற்கை நெறி தொடர்பான வழிகாட்டல் நிகழ்வு

மேற்படி வழிகாட்டல் நிகழ்வு Orientation Programme ஒன்று வெகுவிரைவில் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிகழ்வு மேற்படி கல்வியாண்டுக்கான பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு மிகவும் அவசியமானதும் பயனுள்ளதாகவும் அமையக்கூடியதாகையால் பதிவினை மேற்கொண்ட அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நிகழ்வில் பங்குபற்றும் மாணவர்கள் அனைவரும் *உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* நேரடியாகத் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன் ரூபா 100/=ஐ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்திய உரிய பற்றுச் சீட்டை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்தல்வேண்டும்.

**பதிவாளர்.** (C/34292) (14-18-24)

## இதய அஞ்சலி



நல்லூர், செட்டித்தெருவை வதிவிடமாகக் கொண்டவரும் கொழும்பு, மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களின் முன்னாள் பதிவாளரும (Rtd.Registrar, Colombo, Batticalo Universites) நல்லூர் முருகன் சனசமூக நிலைய ஸ்தாபகரும், போசகரும், சிறந்த சமூகத் தொண்டரும் தற்போது லண்டனில் வசிப்பவருமான திரு.க.இராசேந்திரா M.A. அவர்களின் பாரியார்

### திருமதி பரமேஸ்வரி இராசேந்திரா

அவர்கள் 04.04.2004 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமான செய்திகேட்டு. ஆழ்ந்த கவலையடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் கணவர். பிள்ளைகள். மருமக்கள். பேரப்பிள்ளைகள். உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

75/1, செட்டித்ெ[illegible], ந[illegible] யாழ்ப்பாணம். [illegible]24)

நல்லூர் முருகன் சனசமூக நிலைய சமூகமும், நல்லை வாழ் மக்களும்.

## மூன்ற[illegible]ண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 - 02 - 1953



உதிர்வு 12 - 04 - 2001

### திருமதி இந்திரசேனா கனகநாயகம்

*(இந்திரா அக்கா)*

திதி: 09.04.2004

மூன்று ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவலைகள் நிழலாக என்றும் தொடர்கின்றன.

தகவல்:
திரு.வி.கனகநாயகம் (கணவர்)
*துரைமலர் பொய்கை,*
*செட்டிவளவு லேன்,*
*இணுவில் மேற்கு, இணுவில்.*

T.P.:No. 021 2223715
I.D.D: 0094 212223715

கணவர்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள்,
மைத்துனிமார்கள்,
பெறாமக்கள், மருமக்கள்.

(30024) (14-18-24)

## பருத்தித்துறை பனை [illegible]தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## திருத்தம்

கடந்த 31.03.2004 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் எமது சங்கத்தினால் பிரசுரஞ்செய்யப்பட்ட விளம்பரத்தில் உழவு இயந்திர சாரதி 207/12 எனவும் சம்பளத் திட்டம் 4000-75x10-80-5550 எனவும் தவறுதலாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. தயவுசெய்து இதனைப் பின்வருமாறு திருத்திக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

*பதவி:* உழவு இயந்திரச்சாரதி 312/15

*சம்பளத்திட்டம்:* 3500-65x10-70x10-4850/-

விண்ணப்ப முடிவு திகதி: 14.04.2004இல் இருந்து 20.04.2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

*கிராமக் கோட்டடி,*
*புலோலி.* (சி-34281) (26-14-18-24)

- பொதுமுகாமையாளர்.

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
### யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
### *CERTIFICATE COURSE IN AGRICULTURE*
### *விவசாய சான்றிதழ் பயிற்சிநெறி*

4 மாத காலம் விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருகபரிபாலனம் ஆகிய துறைகளை உள்ளடக்கிய இலவச பயிற்சி நெறிக்கு க.பொ.த. (சாதாரணதரம்) கல்வி கற்ற 18-26 வயதிற்கு இடைப்பட்ட இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி நெறிக் காலத்தில் உதவித் தொகை வழங்குவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் (19.04.2004) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதி விவரங்களுக்கு:

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம் - சுன்னாகம்.

(30614) (24-14-18)

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்

*ஜனனம்* 11 - 01 - 1910



*மரணம்* 09 - 04 - 1998

### திருமதி சிதம்பரம் நாகமுத்து

திதி: 03.04.2004

ஆண்டுகள் ஆறு சென்றிடினும்
அணைந்திடவில்லை நினைவலைகள்
அகத்தினிலிருந்து அணைத்திடவே
அடுத்தொரு ஜனனம் பெற்றிடம்மா.

தகவல்:
செல்வி செல்லம்மா நாகமுத்து
வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி, புலோலி.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*'சிதம்பரம்'*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.*

(30631) (27-14-18-24)

## விற்பனைக்கு

1. கொழும்பு செட்டித்தெருவில் 16' அகலம் - 100' நீளம் கொண்ட 5 பேர்ச்சஸ் காணித்துண்டு - விலை - ரூபா - பதினாறு மில்லியன்
2. பம்பலப்பிட்டியில் நந்தன காடினில் அமைந்த 3 மாடி வீடு விலை ரூபா ஆறு மில்லியன்
3. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 16' அகலம் 200' நீளமும் கொண்ட கடை ரூபா பதினாறு மில்லியன்
4. யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 16' அகலம் 70' நீளமும் கொண்ட கடை ரூபா பதினைந்து மில்லியன்
5. யாழ். கே.கே.எஸ் வீதியில் 22' அகலமும் 200' நீளமும் கொண்ட கடையுடன் உள்ள காணித்துண்டு ரூபா 20 மில்லியன்
6. யாழ். நாவலர் வீதியில் நான்கு பக்கமும் சுற்று மதில் உள்ள காணித்துண்டு விலை ரூபா மூன்று தசம் இரண்டு மில்லியன்
7. யாழ். பிறவுண் வீதியில் இரண்டு பரப்புடன் கூடிய வீடு விலை ரூபா இரண்டு தசம் ஆறு மில்லியன்
8. பலாலி வீதியில் 5 பரப்புக் காணியுடன் வீடு விலை ஏழு மில்லியன்
9. யாழ். ஸ்ரான்லி வீதியில் 17' அகலம் 150' நீளத்தில் கடை கட்டக்கூடிய காணித்துண்டு விலை ரூபா பத்து மில்லியன்
10. யாழ். ஆஸ்[illegible]ரி வீதியில் 14' பரப்பு அத்துடன் 3மாடி கட்டடமும் விலை ரூபா நாற்பது மில்லியன்
11. பம்பலப்பிட்[illegible] சகல வசதிகளுடன் 2மாடி புதிய வீடு 22½ பேச்சஸ் விலை ரூபா அறுபது மில்லியன்

**தொடர்பு: விற்பனை முகவர்:**

அம்மன் ஜுவல்லரி,
150, காலி வீதி,
வெள்ளவத்தை.

கனகசபை தர்மகுலசிங்கம்,
144/2, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(30615) (14-18-24)

# பொதுத் தேர்தல் -2004
# மாவட்ட ரீதியான பெறுபேறுகள்

## அனுராதபுரம் மாவட்டம்

| கட்சி | மதவாச்சி | ஹொரவப்பொத்தானை | அநுராதபுரம் கிழக்கு | அநுராதபுரம் மேற்கு | கலாவெவ | மிகிந்தலை | கெக்கிராவ | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 27,978 | 24,924 | 30,591 | 28,821 | 42,639 | 21,008 | 24,446 | 12,536 |
| ஐ.தே.மு. | 17,809 | 18,231 | 20,623 | 23,876 | 26,744 | 14,336 | 19,606 | 7,387 |
| ஹெல உறுமய | 484 | 500 | 2,045 | 1,260 | 1,314 | 602 | 1,165 | 664 |
| ஐ.சோ.கட்சி | 191 | 244 | 164 | 254 | 242 | 132 | 186 | 26 |
| ஜாதிக பெரமுன | 38 | 51 | 70 | 81 | 74 | 36 | 65 | 17 |
| சுயேச்சை 5 | 17 | 12 | 48 | 30 | 41 | 17 | 21 | 06 |
| சுயேச்சை 4 | 15 | 11 | 23 | 26 | 20 | 16 | 14 | 03 |
| சுயேச்சை 3 | 09 | 09 | 12 | 22 | 15 | 09 | 11 | 03 |
| இடதுசாரி முன்னணி | 09 | 08 | 11 | 16 | 12 | 06 | 11 | 02 |
| சுயேச்சை 1 | 06 | 05 | 08 | 09 | 06 | 04 | 04 | 02 |
| சுவராஜ்ய | 06 | 04 | 07 | 07 | 05 | 04 | 04 | 02 |
| இ.தே.முன்னணி | 05 | 04 | 06 | 06 | 04 | 03 | 04 | 01 |
| பூமிபுத்ர | 03 | 04 | 05 | 05 | 02 | 02 | 03 | 01 |
| ருகுணு கட்சி | 02 | 03 | 04 | 03 | 02 | 02 | 03 | 01 |
| இ.மு.முன்னணி | 01 | 02 | 02 | 03 | 02 | 01 | 02 | 00 |
| சுயேச்சை 2 | 00 | 01 | 01 | 02 | 01 | 00 | 01 | 00 |

## இரத்தினபுரி மாவட்டம்

| கட்சி | பலாங்கொடை | ரக்குவான | இரத்தினபுரி | பெல்மடுளை | கெலியகொட | நிவித்திகல | கலவான | கொலன்ன | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 32,042 | 29,509 | 37,386 | 23,403 | 31,341 | 32,331 | 22,501 | 48,051 | 4,886 |
| ஐ.தே.மு. | 27,685 | 28,453 | 29,670 | 22,745 | 24,934 | 25,321 | 15,726 | 28,117 | 2839 |
| ஹெல உறுமய | 2,364 | 1,644 | 5,605 | 1,979 | 3,142 | 1076 | 660 | 3,749 | 582 |
| ஜாதிக பெரமுன | 87 | 95 | 144 | 100 | 944 | 95 | 64 | 111 | 14 |
| ஐ.சோ.கட்சி | 87 | 74 | 120 | 83 | 104 | 89 | 43 | 104 | 02 |
| லலித் கட்சி | 81 | 46 | 79 | 52 | 94 | 65 | 28 | 84 | 02 |
| இடதுசாரி முன்னணி | 53 | 41 | 67 | 50 | 74 | 41 | 26 | 79 | 02 |
| சுயேச்சை 07 | 51 | 26 | 41 | 39 | 48 | 25 | 20 | 42 | 01 |
| சுயேச்சை 06 | 30 | 23 | 30 | 21 | 28 | 22 | 14 | 31 | 01 |
| சுயேச்சை 05 | 23 | 15 | 20 | 09 | 18 | 11 | 09 | 15 | 01 |
| பூமிபுத்ர | 06 | 09 | 13 | 06 | 07 | 10 | 05 | 14 | 01 |
| சுயேச்சை 01 | 05 | 09 | 10 | 05 | 06 | 07 | 05 | 10 | 00 |
| ருகுணு கட்சி | 05 | 07 | 08 | 04 | 05 | 07 | 05 | 08 | 00 |
| சுயேச்சை 02 | 04 | 05 | 04 | 04 | 05 | 02 | 04 | 08 | 00 |
| சுயேச்சை 03 | 04 | 04 | 04 | 04 | 04 | 02 | 03 | 06 | 00 |
| சுயேச்சை 04 | 04 | 04 | 04 | 04 | 04 | 02 | 03 | 06 | 00 |
| சுவராஜ்ய | 04 | 03 | 03 | 03 | 03 | 00 | 03 | 06 | 00 |
| இ.தே.முன்னணி | 03 | 02 | 03 | 01 | 02 | 00 | 01 | 03 | 00 |
| முற்போக்கு முன்னணி | 01 | 02 | 02 | 01 | 01 | 00 | 00 | 02 | 00 |

## கேகாலை மாவட்டம்

| கட்சி | டெடிகம | கல்கமுவ | கேகாலை | ரம்புக்கனை | மாவனெல்ல | அறநாயக்க | யட்டியன் தோட்டை | ருவான்வெல | தெரனியகல | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 28,964 | 22,980 | 23,778 | 22,187 | 26,099 | 16,911 | 22,081 | 24,746 | 20,436 | 8,894 |
| ஐ.தே.க | 26,328 | 18,693 | 17,509 | 16,858 | 23,290 | 15,321 | 21,500 | 19,950 | 18,881 | 5,502 |
| ஹெல உறுமய | 2,095 | 1,715 | 2,834 | 2256 | 3,151 | 1,458 | 1,083 | 1,760 | 824 | 858 |
| ஐ.சோ.கட்சி | 77 | 44 | 71 | 41 | 81 | 46 | 87 | 83 | 70 | 09 |
| பூமி புத்ர | 40 | 39 | 37 | 23 | 82 | 40 | 74 | 56 | 44 | 06 |
| ஐ.மு.ம.கூ. | 37 | 36 | 28 | 23 | 66 | 39 | 46 | 52 | 42 | 04 |
| ஜாதிக பெரமுன | 36 | 18 | 18 | 22 | 32 | 12 | 43 | 50 | 27 | 03 |
| இடதுசாரி முன்னணி | 16 | 07 | 07 | 20 | 09 | 08 | 15 | 29 | 15 | 02 |
| சுயேட்சைக் குழு - 9 | 10 | 07 | 05 | 13 | 09 | 04 | 07 | 07 | 11 | 02 |
| இ.தே.மு. | 07 | 06 | 04 | 11 | 08 | 04 | 06 | 05 | 07 | 01 |
| சுயேச்சை 1 | 06 | 06 | 04 | 04 | 08 | 03 | 06 | 05 | 06 | 01 |
| சுயேச்சை 8 | 05 | 02 | 03 | 03 | 05 | 03 | 03 | 04 | 05 | 00 |
| இ.மு.மு. | 05 | 02 | 02 | 03 | 05 | 02 | 02 | 04 | 04 | 00 |
| சுயேச்சை 6 | 04 | 02 | 02 | 03 | 03 | 02 | 02 | 03 | 04 | 00 |
| சுயேச்சை 3 | 03 | 02 | 02 | 02 | 03 | 02 | 02 | 02 | 03 | 00 |
| ருகுணு கட்சி | 03 | 02 | 01 | 02 | 03 | 02 | 02 | 02 | 02 | 00 |
| சுயேச்சை 2 | 02 | 01 | 01 | 01 | 03 | 01 | 02 | 02 | 02 | 00 |
| சுயேச்சை 4 | 02 | 01 | 01 | 01 | 03 | 01 | 02 | 01 | 01 | 00 |
| சுயேச்சை 5 | 02 | 01 | 00 | 01 | 03 | 01 | 01 | 01 | 01 | 00 |
| சுயேச்சை 7 | 02 | 01 | 00 | 01 | 02 | 01 | 01 | 01 | 01 | 00 |
| லிபரல் கட்சி | 02 | 00 | 00 | 01 | 01 | 01 | 01 | 00 | 01 | 00 |
| இ.முஸ்லிம் கட்சி | 02 | 00 | 01 | 00 | 00 | 00 | 00 | 00 | 00 | 00 |

## புத்தளம் மாவட்டம்

| கட்சி | புத்தளம் | ஆனமடுவ | சிலாபம் | நாத்தாண்டிய | வென்னப்புவ | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|
| ஐ.தே.மு. | 34,273 | 33,715 | 31,124 | 25,270 | 29,042 | 3,564 |
| ஐ.ம.சு.கூ. | 20,069 | 22,547 | 29,934 | 20,461 | 25,378 | 2,559 |
| ஹெல உறுமய | 303 | 1,231 | 2,352 | 2,466 | 3,208 | 440 |
| ஜாதிக பெரமுன | 147 | 98 | 205 | 179 | 151 | 05 |
| ஐ.மு.ம.கூ. | 69 | 47 | 61 | 33 | 40 | 04 |
| சுயேச்சை 12 | 43 | 31 | 42 | 22 | 31 | 03 |
| ஐ.சோ.கட்சி | 37 | 24 | 26 | 18 | 24 | 02 |
| இடதுசாரி முன்னணி | 26 | 21 | 21 | 18 | 16 | 01 |
| சுவராஜ்ய | 17 | 18 | 19 | 16 | 13 | 01 |
| ஐக்கிய லலித்.மு | 13 | 11 | 10 | 07 | 07 | 01 |
| சுயேச்சைக் குழு 11 | 09 | 07 | 08 | 04 | 06 | 01 |
| சுயேச்சைக் குழு 07 | 08 | 06 | 07 | 04 | 06 | 00 |
| சுயேச்சைக் குழு 09 | 08 | 05 | 06 | 04 | 05 | 00 |
| சுயேச்சைக் குழு 10 | 08 | 04 | 06 | 03 | 05 | 00 |
| சுயேச்சை 01 | 06 | 04 | 04 | 03 | 05 | 00 |
| இ.மு.மு. | 06 | 04 | 04 | 03 | 04 | 00 |
| சுயேச்சை 02 | 04 | 03 | 03 | 03 | 03 | 00 |
| சுயேச்சை 06 | 04 | 03 | 03 | 02 | 02 | 00 |
| இ.மு.க. | 04 | 03 | 03 | 02 | 02 | 00 |
| சுயேச்சை 08 | 03 | 02 | 03 | 02 | 02 | 00 |
| பூமிபுத்ர | 03 | 02 | 02 | 01 | 01 | 00 |
| சுயேச்சை 03 | 02 | 01 | 02 | 01 | 01 | 00 |
| சுயேச்சை 04 | 02 | 01 | 01 | 01 | 01 | 00 |
| ருகுணு கட்சி | 02 | 01 | 01 | 01 | 00 | 00 |
| இ.தே.மு. | 01 | 01 | 01 | 01 | 01 | 00 |
| சுயேச்சை 05 | 00 | 00 | 01 | 00 | 00 | 00 |

மானிப்பாய் றோட்டறக்ட் கழகம்
நடத்தும் க.பொ.த.உயர்தர
மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டி
**கருத்தரங்கு - 2004**

காலம்: நாளை (10.04.2004) சனிக்கிழமை
இடம்: மானிப்பாய் மகளிர் கல்லூரி
இரசாயனவியல்: திரு.அன்பழகன்
காலை 9மணி - 12மணிவரை
பௌதிகவியல்: திரு.தயாளன்
பி.ப. 12.30 மணி முதல் 3.30 மணிவரை.

யாழ். முன்னணி ஆசிரியர்களினால் நடத்தப்படும் இக் கருத்தரங்கில் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களையும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

✣ பாடக்குறிப்புகள் அடங்கிய கையேடுகளும் வழங்கப்படும்.

(C/34335)		- செயற்திட்ட இயக்குநர்.


## நூல் வெளியீடு

அருட்திரு. பெஞ்ஜமின் ஜெயராஜா எழுதிய 'பஞ்சமரும் சமூகத்தொடர்புகளும்' எனும் நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிறு மாலை 3 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேராயர் எஸ்.ஜெபநேசனின தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வாழ்த்துரையினை அருட்திரு. ஜே.இரத்தினசிங்கமும், ஆய்வுரையினை யாழ். பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் இ.குமரனும் நிகழ்த்துவர்.(ம-ரி)

## போக்குவரத்து நெருக்கடி நீங்கியது

குருநகர்,ஏப்.9

குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதிக்கும் குருநகர் 5ஆம் குறுக்கு வீதிக்கும் இடையில் அமைந்துள்ள கழிவு நீர் செல்லும் வாய்க்காலின் மேல் திறந்த நிலையில் சேதமடைந்து காணப்பட்ட மூடி, யாழ்.மாநகரசபையினரால் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதனால், இவ்வீதியூடான பொதுப் போக்குவரத்து தற்போது சீரடைந்துள்ளது என பயணிகள் தரப்பில் கூறப்பட்டது.

இதே நேரத்தில், குருநகர் கடற்கரை வீதியையும், குருநகர் மவுன்காமல் வீதியையும் இணைக்கும் வீதியில் அமைந்துள்ள கழிவு நீர் செல்லும் வடிகாலின் மேல் அமைந்துள்ள மூடிகளில் சில சேதமடைந்து வடிகாலில் வீழ்ந்து காணப்படுகின்றன.

இதனால், இவ்வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-51)

## பதின்னான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 – 07 – 1918



மறைவு
09 – 04 – 1990

அமரர்
**உவிலலியம ஞானசிகாமணி அனபபா**
(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

"மனிதருக்கென்றே ஊழியஞ் செய்யாமல்
கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள"
எபேசியர் 6:8

தகவல்:
வட்டுக்கோட்டை.	(30637) (21-14-12)	அ.ஜெயராஜன் (மகன்).

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
05 – 04 – 1934



விண்ணில்
02 – 04 – 2002

அமரர் கந்தையா இராசலிங்கம்

திதி: 09.04.2004

ஈராண்டுகள் கழிந்தாலும்
ஈரவிழிகள் காயவில்லை!
ஒவ்வொரு நிகழ்வினிலும்
உம்நினைவே தொடருதப்பா
மறக்க முடியவில்லை அப்பா
நீ மண்ணை விட்டு சென்றகதை!

உமது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இல.16,காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(30635)

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 45ஆம் நாள் நினைவில்...







**றெங்கசாமி ஜெகதீஸ்வரன்**
பிறப்பு – 29.09.1983
இறப்பு – 25.02.2004

**இராமசாமி சிவசுப்பிரமணியம்**
14.04.1938
26.02.2004

**சண்முகநாதன் சதுமுகன்**
22.12.1983
27.02.2004

அன்பு, பண்பு, பொறுப்புமிக்கவராய் ஆயப்பகுதியில்
பணியாற்றி வரும் வேளையில்
வீதியில் காத்திருந்த காலனவன்
விதிவசத்தால் பறித்தானே – உம்முயிரை
உடனெடுத்தான் ஓர் உயிரை என அறிந்து
உயிர் துடித்திருந்த வேளையில் – வந்ததே
இறுதிச் சடங்கில் கலந்து திரும்பிய இரு உயிரை
இடைவழியில் பறித்த செய்தி!
உங்கள் உருவங்கள் நிழலாகப் போனாலும்
நினைவுகள் என்றும் எம்முடன் நிலைத்திருக்கும்.

பணிப்பாளர், பொறுப்பாளர்,
பணியாளர்கள்,
ஆயப்பகுதி - நிதித்துறை.

(C/24337)(22-14-26)